உ

ஓம் கணேசாய நம:

ஸ்ரீ பாலகுஜாம்பாள் சமேத வேதபுரீசாய நம:

1937

திரு ஞானசம்பந்த சுவாமிகள் அருளிய

திரு ஒத்தூர்த் தேவாரமும்,

வே. மு. ஸ்ரீநிவாச முதலியார் எழுதிய சிற்றுரையும்.

சென்னை பி. என். பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

முதற் பதிப்பு] 1940 [விலை அணு நான்கு.

009950

உ

ஓம் கணேஸாய நம:

அறிக்கை.

சிறுபஞ்ச காவியங்களில் ஒன்று எனப்படும். யசோதர காவியம் என்னும் தமிழ் நூல் என்னால் எழுதப்பட்ட புதிய உரையுடன் விரைவில் விலைக்குத் தரப்படும். அந்நூல் முன் எவராலும் உரை எழுதப்படாதது. என்னால் எழுதப் பட்ட உரையே முதல் உரை. அந்நூல் "சித்திரத்தில் உருவம் சிதைத்தல் ஆகாது" "அறம் எனப்படுவது ஆருயிர் ஓம்பல்" "அஹிம்சா பரமோ தர்ம்ம:." என்னும் அருள் மொழிகட்கு இலக்கியம் ஆயது. அப் புத்தகம் ஆறு மாத கால அளவில் அச்சிட்டு முடிவு பெறும். அதன் விலை முதலிய விவரம் வேண்டுபவர் ரிப்ளை கார்டு எழுதி தெரிந்து கொள்ளலாம்.

இப்படி

17-4-1940.

வே. மு. ஸ்ரீநிவாஸ முதலியார்,
நெ. 1, எண்ணைக்காரத் தெரு,
காஞ்சீபுரம்.

SRI VENKATESWARA ORIENTAL INSTITUTE
1556/2
LIBRARY
TIRUPATI.

ஓம் கணேஸாய நம:

திரு ஒத்தூர்த் தேவாரச் சிற்றுரையின் புறவுரை.

திரு ஒத்தூர்த் தேவாரத்தினுக்குத் திருவாளர், "வித்துவான் ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை" என்பவரால் எழுதப்பட்ட உரைநூல் ஒன்றனை யான் கண்டேன். அந்நூலுள், *பேரறிஞர்கள் பலரால் பகரப்பட்ட உரைச் சிறப்புப் பாயிரங்கள் பலவுள. அப் பாயிரங்களைப் பகர்ந்த அறிஞர்கள், "நகுதற் பொருட்டு அன்று நட்டல் மிகுதிக்கண் மேற்சென்று இடித்தற்பொருட்டு" என்ற பொய்யா மொழியை மறந்தவராய் அவ்வுரையுள் உள்ள பிழைகளை எடுத்துக் காட்டித் திருத்த முயலாமல் "வாரம் பட்டுழித் தீயவும் நல்லவாம்" என்ற ஆன்றோர்தம் மொழிக்கு இலக்கிய மாகியவராய் உரைகாரரிடங் கொண்ட வாரத்தினால், தாங்கள் பகர்ந்த பாயிரங்களுள் அவ்வுரையைப் பலவாறாகப் புகழ்ந்துளார்கள். அப்படி வாரங்கொண்டு பிழைகளை மறைத்துப் புகழ்தலினால் தமிழின் பெருமைகெடுதலன்றிக் கற்க வேண்டுவனவற்றை முறையாகவும் முற்றாகவும் கல்லாமுன் நூலெழுதவும் உரை எழுதவும் முயலுபவர், திருந்திய நன்னெறியைப் பெறாரென்பதனை அப்பேரறிஞர்கள் மறந்தார்கள் போலும்.

ஆதலால், அவர்களும், பிறரும், வாரங்கொண்டு பிறரெவருக்கும் அத்தகைய பொய்ப்புகழ் பொருத்திச் சிறப்புப் பாயிரங் கொடுத்துத் தமிழ்மொழிக்கு ஒருகேடு செய்யா திருத்தற் பொருட்டு அவ்வுரையின் குற்றங்களுள் (கற்க வேண்டுவனவற்றை முறையாகவும் முற்றாகவும் கல்லாதவருக்கும்) வெள்ளிடையாகத் தோன்றும் பருஉப் பொருட்டவாகிய (ஸ்தூலமாகிய) சில குற்றங்களை எடுத்துக் காட்ட எண்ணி முறையாகவும் முற்றாகவும் கல்லாதாரினத்தேனாகிய யானும் இச் சிற்றுரையினை எழுதினேன்.

இவ்வுரை சிற்றுரையாமோ? ஆம். சிற்றுரையே. என்னை? முன்னுரையுள் வெள்ளிடையாகக் காணப்பட்ட பருஉப்

---

*தோரமங்கலம் ஆசிரிய அ. வரத நஞ்சையப் பிள்ளை அவர்கள். தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத் தலைவர் திரு, த. வே. உமா மகேசுவரம் பிள்ளை அவர்கள், B. A., B. L., சென்னைச் சைவசித்தாந்த மகாசமாஜக் காரியதரிசி திரு, ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள், B. A., B. L., சென்னைக் கார்ப்பொரேஷன் கல்வி நெறித்தலைவர் திரு, ச. சச்சிதாநந்தம் பிள்ளை அவர்கள், B. A., L.T., ஆகிய அந்நால்வரும்.

பொருட்டவாகிய (ஸ்தூலமாகிய) பிழைகளுள் சிலவற்றை எடுத்துக் காட்டி விளக்கியதால் நூல் நீண்டதன்றி நூலின் பொருளை விளக்கியதால் உரை விரிந்ததன்று ஆதலால். இச்சிற்றுரை, முன் உரைகாரரை மறுக்கும்பொருட்டு எழுதப்பட்டதன்றெனக் கொள்ளுக. என்னை? அவ்வுரைகாரர்தம் பேச்சுக்களையும், கட்டுரைகளையும் யான் பார்த்திருக்கிறேன். அதனால், அவர் போன்றாரைத் தெருட்டி நற்புக்கொளுவல் என் போன்றாருக்கு இயலாதவொரு செயலென்பதனைப் "புறந்தூய்மை நீரானமையும் அகந்தூய்மை வாய்மையால் காணப்படும்" என்ற பொய்யா மொழியால் தெளிந்தேன் ஆதலால். அவர்தம் உரை நூலுக்கு உரைச் சிறப்புப் பாயிரம் பகர்ந்த பேரறிஞர்கள் பொருட்டே இச்சிற்றுரை என்னால் எழுதப்பட்டது எனக் கொள்ளுக. இச் சிற்றுரையை மறுப்பவர் "வாளொடு என் வன்கண்ணர் அல்லார்க்கு நூலொடு என் நுண் அவை அஞ்சுபவர்க்கு" என்ற பொய்யில் புலவனார்தம் பொருளுரையைத் தேராமல் தம் பெயரை அறிவிக்கவும் நாணம் உடையவராய்ப் புனை பெயராலே, பிறர் பெயராலே, நேரல்நெறியின் நீரல் சொற்களைக்கொண்டு (இந்த மூஞ்சிக்குத் தஞ்சாவூர் மஞ்சளா என்பதுபோன்ற விலாவணைபாடி) எழுதுவார் எழுத்துக்களை "நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக் குலத்தின்கண் ஐயப்படும்" என்ற திருமொழியை உன்னி யான் போற்றுதல் செய்யேன். தூற்றுதல் என் உள்ளத்திலும் கொள்ளேன். என்னை? அச்செயல் இழிமக்கள் செயல் என்பர் அறிஞர் ஆதலால். "நயனில சொல்லினும் சொல்லுக சான்றோர் (முன்) பயனில சொல்லாமை நன்று" என்ற தேவர்தம் ஆணையை மறவாதவராய் நேரிய நெறியில் இச் சிற்றுரையின் பிழைகளை எடுத்துக்காட்டி எழுதுவார் எழுத்தை "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வு உண்டாம் உய்வு இல்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்ற திருமொழியைப் போற்றி நன் நண்பர்தம் நல்லெழுத்து என ஏற்றுப்போற்றுவன்.

இச் சிற்றுரையின் பிழைகளை நீக்கிச் செம்மை செய்து தந்த என்னுடைய ஆசிரியர்களுள் ஒருவராகிய ஆசிரியர், கா. ர. கோவிந்தராஜ முதலியார் அவர்களின் நன்றியை மறவாது மகிழ்வதன்றி அவர்கட்கு வேறு கைம்மாறு செய்யும் வகையைக் காண்கிலேன்.

"இருக்கை" நெ 1, எண்ணைக்காரத் தெரு, காஞ்சீபுரம்.	இப்படி, வே. மு. ஸ்ரீநிவாச முதலியார்.

உ

ஓம் கணேசாய நம :

ஸ்ரீ பாலகுஜாம்பாள் சமேத வேதபுரீசாய நம :

திரு ஞானசம்பந்த சுவாமிகள் அருளிய

திரு ஓத்தூர்த் தேவாரமும்,

வே. மு. ஸ்ரீநிவாச முதலியார் எழுதிய சிற்றுரையும்.

திருச்சிற்றம்பலம் (பண்—பழந்தக்க ராகம்.)

1. பூத்தேர்ந் தாயன கொண்டுநின் பொன்னடி
ஏத்தா தாரில்லை யெண்ணுங்கால்
ஓத்தூர் மேய வொளிமழுவா ளங்கைக்
கூத்தீ ரும்ம குணங்களே.

* முன் உரைகாரர் பொழிப்பு:—(திருவோத்தூரின்கண் விரும்பி எழுந்தருளியுள்ள பிரகாசம் பொருந்திய மழுவாகிய ஆயுதத்தை ஏந்திய அழகிய கையினையுடைய கூத்தாடும் பரமனே! உம்முடைய குணங்களைப் பாராட்டி உன் பொன்னடிகளில் பூவும் பூசைக்கு வேண்டும் மற்ற பொருள்களும் நல்லவாய் ஆராய்ந்து கொண்டுவந்து அருச்சித்துத் துதிக்காதவர்கள், ஆராயுமிடத்து, ஒருவருமிலர் என்றவாறு.) என்பது.

பொருள்கோள்:—ஓத்தூர் மேய ஒளி மழு வாள் அங்கை கூத்தீர்! ஆய் அன பூ தேர்ந்து கொண்டு நின் பொன் அடி ஏத்தாதார் இல்லை எண்ணும் கால் உம்ம குணங்கள் ஏ.

இதன் பொருள்:—திரு ஓத்தூரினை விரும்பி வீற்றிருப்பவரும், சுடுகை பொருந்தியதும் ஒள்ளியதுமாகிய மழுவை ஒளி பொருந்திய அகக் கையில் ஏந்திக் கொண்டு திருக்கூத்து ஆடுபவருமாகிய இறையவரே! ஆகமங்களில் கூறப்படும் விதிப்படி குற்றம் அற்ற பூக்களைத் தேடிக் கொண்டுவந்து நும்முடைய பொன்போலுந் திருவடிகளில் இட்டு வணங்கி வாழ்த்தாதார், தேவர்கோன் முதலாக மூன்று உலகங்களிலும்

---

*முன் உரைகாரர் வித்துவான். ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை என்பவர், முன் உரைகாரர் எனக் கூறப்படும் பிறவிடங்களிலும் அவரையே கொள்ளுக.

ஒருவரும் இலர். அவர்கள், நும்மை வணங்குதலின் ஏது என்னையென ஆய்ந்து பார்ப்பின், நும்மை அடைந்தார்க்கு வரைவின்றி அருளும் நும்முடைய அளவில்லாத நற்குணங்களே ஆகும். ஆதலால், நும் அடிமையாகிய யானும் நும் அருளைப் பெறுவான் நும்மை வணங்குகின்றேன் என்க.

குறிப்புரை:—தேர்ந்து - தேடி. ஆய் - அழகு. ஆய்அன - அழகை உடையன; துற்றும் அற்ற. நின், நும் மயக்கம். பொன் அடி, பொன்போலும் அடி. இறையவன் பொன்வண்ணன் ஆதலால், உவமைத் தொகைப்பாற் படுத்தலே சிறப்பாம். எண்ணுங்கால் - ஆய்ந்து பார்ப்பின். மே - (உரிச்சொல்,) விருப்பம். மேய: அகர ஈறு பெயர் எச்சவிகுதி. யகரமெய் இறந்தகால இடைநிலை. மேய...கூத்தீர் என முடிக்க. மழு, சுடுகைபொருந்திய இருப்பு வட்டு. வாள் - ஒளி. அங்கை - (அகம் + கை, மருஉ) உள்கை, அகக்கை. ஏ, தேற்றம்.

சிறப்புரை:—முன் உரைகாரர், மேய என்ற சொல்லை மேவுதல் என்ற தொழிற்பெயரின் திரிபாக எண்ணி "மேவிய என்று இருக்கவேண்டியது மேய என நின்றது எனக்கூறி "நம்பு மேவு நசையாகும்மே" (தொல். உரி-33.) என்ற பாவைக் காட்டினர். அவர் காட்டிய காட்டுப் பொருத்தம் அன்று. என்னை? அப்பா, உரியியல்பா. அப்பாவில் உள்ள மே என்ற ஓரெழுத்து மொழியே விருப்பம் என்ற பொருளைத் தரும் என்பது உரையாசிரியர்கள் கருத்து ஆதலால். அவ்வுரியியல் பாவிலுள்ள மே என்ற மொழி மேஎ என அளபேற்றிருத்தலே சிறப்பாகும். என்னை? உரையாசிரியர்களால் காட்டப்பட்ட காட்டுக்களால் அறிக. மற்றும் அவர், "பொன்னடி" என்பதற்குப் "போகம் அளிக்கும் திருவடி" ஆதலால் பொன்னடி என்றார் எனப் புராணிகர்களால் கூறப்படும் பொருந்தாப் பொருள்கூறி "பொன்னடைந்தார் போகங்கள் பல அடைந்தார்" என்ற (பிரம-தேவா.) தொடரைக் காட்டினர். அவர், அத்தொடரை உடைய பாவின் உண்மைப் பொருளை உணர்ந்திலர் போலும். நிற்க,

மழு என்பது போரிடையே எதிர்த்து நிற்பார் ஒருவர்மீது ஒருவர் எறிந்துகொள்ளும் கொல்படைகளுள் ஒன்றன்று. அது, தாருகாவனத்து முனிவர்கள், சிவபெருமானைக் கொல்லும் பொருட்டு ஓமத்தீயின் ஆக்கிய புலி, மான், பாம்பு, துடி, தீப்பிழம்பு, முயலகன், பூதம், வெண்டலை *முதலியவற்றுள்*

சேர்ந்ததும், சுடுகை பொருந்தியதும், வெள்ளியவண்ணம் உடையதுமாகிய ஒருவகை இருப்புவட்டு எனக் (கட்டி - உருண்டையெனக்) கொள்ளல் வேண்டும். என்னை ?

தாருகாவனத்து முனிவர்களால் சிவபெருமான்மீது ஏவப்பட்ட புலி, மான், பாம்பு, துடி, தீப்பிழம்பு, முயலகன், பூதம், வெண்தலை, மழு முதலியவற்றுள் யாதொன்றும் உலகில் போரிடையே ஒருவர்மீது ஒருவர் எறிந்துகொள்ளும் இயல்பினைப் பெற்ற படைவகைகளைச் சேர்ந்ததன்று. உலகினரால் போரிடையே ஆளப்படும் படைகளுள் ஒன்றனை ஏற்று ஆடினன் சிவபெருமான் எனல் அப்பெருமான்றன் பெருமை பொருந்திய ஆற்றலுக்குச் சிறப்பன்று. பிறரால் தாங்குதற்கு அரிதாகிய படையைத் தாங்கி ஆடினன் எனவே அப்பெருமான்றன் ஆற்றலுக்குச் சிறப்பாகும். பிறர் செய்தற்கு அரிதாகிய செயலைச் செய்த சிவபெருமான்றன் ஆற்றலை நினைப்பூட்டுவான், இப்பாவில் குறிக்கப்பட்ட “மழு” என்ற சொல்லுக்குச் சுடுகை பொருந்திய இருப்புக்கட்டி எனப் பொருள்கோடலே பொருத்தமாகும். என்னை ? அம்மழுவேன்சோல் கூத்தர் என்ற அப்பெருமான்றன் (சிறப்புத் தொழிலொடு கூடிய) பெயரைச் சிறப்பித்து நிற்றலால். நிற்க,

“வான் ஏறு உரும் எனது ஆயுதம் அவன் ஆயுதம் மழுவாள், யான்” (தக்க-யாக-453.) என்றதொடருக்கு அதன் உரையாசிரியர் “ஆகாசத்தில் உரும் ஏறான வச்சிராயுதம் எனதாயுதம், ஈசுவரனுக்கு ஆயுதம் மழு” என்று பொழிப்புரைத்து அவ்வுரைக்குச் சிறப்புரையாக “மகா தேவருடைய திருக்கையிலுள்ள மழுவென்பது ஓமமந்திரத்தால் பிராமணர் (தாருகாவன முனிவர்) விடுவித்த பகைப்படை என்றான் என்றவாறு. மழுவை வாள் என்றதன்று; ஆள்யான் - ஆளுகிறயான் என்றவாறு. மழுவாள் அன்று என்று ஆட்சேபஞ் சொல்லலும் ஆம். எனவே மழு, ஏந்தும் மழு என உணர்க. (எறியும் மழு அன்று) அஃது இருப்புக்கட்டி போலும் நெருப்புக்கட்டி என்றவாறு” எனக் குறித்தார். அக்குறிப்பு இவண் பொன்னைப் போற்றுதல் போலப் போற்றுதல் பாலதாம்; “இரும்பின் கட்டி என்பர் ஒரு சாரார்” என முன்னுரைகாரர்போல எளிதாக எள்ளி இகழ்தற்பாலதன்று. இன்றும் சூளுரைப்பாருள் சிலர், தம் மெய்ம்மையைக் காட்டுவான் யான், மழுவேந்திச் சொல்லுவன் என்னும் வழக்காற்றினையும், அரசியலாரால் தொகுக்கப்பட்ட அகராதியில் (தமிழ்

லெக்ஜிகனில்) மழு ஆஸ்ரித விஷயத்தில் மழுவேந்திக் கொடுத்துக் காரியஞ் செய்யுமவன்" (ஈடு-2-6-9) என்ற குறிப்பினையும் நினைக்க.

மழு என்ற சொல் போர்க் கருவியாகிய பொருளைச் சுட்டிப் பிறவிடங்களில் சிவபெருமானை அல்லது பிறரைச் சார்ந்து நிற்குமாயின், அச்சொல்லுக்குப் பரசு அல்லது கோடாலி (கோடரி, கோடழி) என்ற படையெனப் பொருள் கொள்ளுக. என்னை? "எறி மழுவோடு இளமான் கையின்றி இருந்த பிரான்" (புக, வீழி - தேவா.) "பரசு தரித்திலர் போலும்" (பிரம - தேவா.) "பரசு எனும் படை ஆள்வீர்" (வேணு - தேவா.) மழுப்பல கொண்டு அவர் மார்பம் பிளப்பர்" (சூளா-துறவு-100) "பாவப் பெருமரம் விரதமழுவின் வேர் அறத் துணிக்கும்" (பெருங்கதை-2-11-43, 44.) "நான்மறையாளன், மழு ஏறு உண்ட மன்னவன் போல" (பெருங்கதை-3-27-178.) என்ற தொடருக்கு நன்றியறிந்தாரால், தம் மனத்துள் எந்நாளும் மறவாமல் போற்றப்படும் பேராசிரியர் * பிரம்மஸ்ரீ உத்தமதானபதி ஐயரவர்களால் எழுதப்பட்ட குறிப்பும் ஏதுக்களாம்.

* மஹா மஹோபாத்தியாயர், தாக்ஷிணாத்திய கலாநிதி, டாக்டர் முதலிய பலவகைச் சிறப்புப் பெயர்களை உடைய பேராசிரியர் பிரம்மஸ்ரீ உ. வே. சாமிநாத ஐயரவர்கள். உத்தமதானபதி என ஒரு புதிய பெயரைச் சொல்லியதன் ஏது என்னை? முற்கூறிய சிறப்புப் பெயர்கள் திரு. ஐயரவர்களின் அறிவின் பெருமையைச் சிறப்பித்தல் அல்லாமல் அவர்கள் தமிழ் மொழிக்கும் தமிழர்கட்கும் செய்த உபகாரத்தையும், அவ்வுபகாரத்தின் பயனையும் சிறப்பியா ஆதலால், "ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவர்க்கு எழுமையும் ஏமாப்புடைத்து" என்ற பொய்யாமொழிக்கு ஏற்ப அவர்கள்செய்த உபகாரத்தின் பயன், மக்கட்கு அவர்களின் பிறப்புக்கள் தோறும் தொடர்ந்து நலம் விளைப்பதாகும். அன்றி, அவர்கள் உபகாரம் உயர்குடிப் பிறப்பாளர், கீழ்க்குடிப் பிறப்பாளர் என்றும், பொருளாளர், வறுமையாளர் என்றும் பிரித்து வரைவு செய்யாமல் யாவர்க்கும் பயன்தருவதாகும். அவர்கள் செய்த உபகாரம் என்னை? செல்லால் அரிக்கப்பட்டு மண்ணாகி மாழ்குவதற்கு உரிய நூல்களை மாழ்காமல் பாதுகாத்ததன்றிச் சிறியவிலையால் யாவர்க்கும் எளிதில் கிடைக்கும்படி செய்தனர். அந்த உபகாரத்தினும் சிறந்ததொரு உபகாரம் உண்டோ? இல்லை நிற்க,

2. இடையீர் போகா விளமுலை யாளையோர்
புடையீ ரே!புள்ளி மானுரி
உடையீ ரே!யும்மை யேத்துது மோத்தூர்ச்
சடையீ ரே!யும தாளே.

முன் உரைகாரர் பொழிப்பு:—(நடுவே ஈர்க்கும் நுழையாத இளமை பொருந்திய கொங்கைகளை உடைய உமாதேவியை ஒரு பக்கத்தே கொண்டு, புள்ளிகளை உடைய மான் தோலாகிய உடையை உடுத்து, திருவோத்தூரின்கண் எழுந்தருளிய சடையினையுடைய பரமனே! உம்முடைய திருவடிகளை வணங்கி உம்மைத் துதிக்கின்றோம். எ-று.) என்பது.

பொருள்கோள்,—ஓத்தூர் சடையீரே! இடை ஈர் போகா இள முலையாளை ஓர் புடையீரே! புள்ளி மான் உரி உடையீரே உம் அது ஆள் உம்மை ஏத்துதும் ஏ.

இ - ள்:—திரு ஓத்தூரினை விரும்பி வீற்றிருக்கும் சடை முடியை உடைய இறையவரே! அயல் இடத்தில் ஈர் அள

திரு. ஐயர் அவர்களின் தகுதிக்கு ஏற்பத் தமிழர்கள் சிறப்புச் செய்யார்கள் எனத் திருவருளே, உத்தமதானபதி என்ற சிறப்புப் பெயரை அவர்கட்குத் தாயின் கருவினிலே செறித்து வைத்ததெனக் கொள்ளுக. என்னை? அவர்கள் பிறந்த ஊர் உத்தமதானபுரம் ஆதலால். அது, ஆகுபெயர். இன்று வரை அவர்களின் தகுதிக் கேற்பப் புகழ் செய்யாத் தமிழர்கள் இனி எனும் உத்தமதானபதி என்ற சிறப்புப் பெயரால் புகழ்வார்களாயின் அத் தமிழர்கள் நன்றி யறிந்தார் என்ற புகழுக்கு உரியவராவார். இப்படி ஒரு பெயர் பண்டு எவருக்கேனும் உண்டோ? பலருக்கு உண்டு. என்னை? சதத்தனார், நற்றத்தனார், திருவள்ளுவனார் என்பன. அவை, ஈகையாகிய உபகாரத்தையே சிறப்பிப்பனவாம். திரு. ஐயர் அவர்களின் ஈகையாகிய உபகாரத்தைச் சிறப்பித்தற்கு உத்தமதானபதி என்ற பெயரே ஏற்றதாகும். "உத்தமதானனார்" எனலும் ஆம். உத்தமதானபதி என்பதற்குத் தலையாய ஈகையாளர்க்குள் தலைவர் என்பது பொருள். உத்தமம் என்ற பெயர் தலை(மை) என்ற பொருளைத்தருமோ? தரும். என்னை? ஆசிரியர் திருவள்ளுவனார், உத்தமம், மத்திமம், அதமம் என்ற, வடமொழிப் பெயர்களால் கொள்ளத்தக்க பொருள்களைக் குறிக்கும் இடங்களில் முறையே தலை, இடை, கடை என்ற தமிழ் மொழிச்சொற்களால் குறித்தனர். அக்குறிப்புக்களை அவர்தம் முப்பாலுள் காண்க.

வும் நெகிழ்ந்து செல்லாதனவும், மெல்லியனவும் ஆகிய குவிந்த முலைகளை உடைய உமாதேவியாரை ஒரு பக்கத்தில் கொண்டவரே! புள்ளிகள் பொருந்திய மானின் தோலை உடையாக உடுத்தியவரே! நும்முடைய அடிமையாகிய யான் நும்மை வணங்குகின்றேன் என்க.

குறிப்புரை:—இடை - அயல்இடம். போகா - செல்லா, நெகிழ்ந்து செல்லா. ஈர், அணுவினும் சிறிய நுண்ணிய உரு. ஞாயிற்றின் கதிர் சிறுபுழை வழியாய் மனையுள் புகுங்கால், புகை போல நீண்டு தோன்றும் சாயலானது, வளியால் சிதறப்படுமாயின், அச்சாயலின் விலகி நுண்ணியதாகத் தோன்றும் பொருளிற்குத் திரிசரேணு என்று பெயர்;அத்திரிசரேணு எட்டுக்கொண்டது ஈர் என்பது. (மனுத-அத்-8-சுலோ-132) அது, இம்மியுங் கொடேன், இம்மியும் பெற்றிலேன் என்னும் வழக்குப்போல இவண் சிறுமைப் பொருட்டு நின்றது. இளமுலையாள், உமாதேவியார். புடை-பக்கம். உரி - (ஆகுபெயர்) தோல். உம்மை, நும்மை திரிபு. ஏத்துதும் - (ஒருமையிற் பன்மை மயக்கம்) வணங்குகின்றேன். உம், நும்திரிபு. ஆள்-அடிமை.

சிறப்புரை:— அத்திருப்பதியில் உமாதேவியார் பெயர் இளமுலை நாயகியார் "பால குஜாம்பாள்" என்பது. ஆதலால், "ஈர் இடைபோகா இளமுலை" என்ற தொடருக்கு "ஈர்க்கும் இடையில் நுழையாதபடி புடைதிரண்டு பருத்த முலை" எனல் பொருத்தம் அன்று. அடிகள் திருஅண்ணாமலைத் திருப்பதிகத்துள்ளும் "தளரா முலை முறுவல் உமை" என்றார்கள். என்னை? அவண், உமாதேவியார் பெயர் உண்ணாமுலை நாயகியார "அபீத குஜாம்பாள்" என்பது ஆதலால். (தளர்தல்-நெகிழ்தல். தளரா-நெகிழா.) அக்குறிப்பு இவண் நினைத்தற்பாலது. தளராமுலை என்ற தொடரில் உள்ள முலை என்ற சொல்லை முல்லை என்ற சொல்லின் விகாரமாகக்கொண்டு முறுவலுக்கு உவமையாகக் கோடலும் ஆம். (தளர்தல்-நெகிழ்தல், பூத்தல். தளரா-பூவா, அரும்பு.) ஆயினும் அப்பொருள் சிறப்பின்று. உமாதேவியார் பெயர் உண்ணாமுலை நாயகியார் ஆதலால்.

பீர்க்கு எனவழங்குஞ் சொல் பீர் என நூற்களில் வழங்குமாறு போல ஈர்க்கு என்பதும் ஈர் என வழங்குவதாயிற்று" எனக் கூறிப் "பீரென் கிளவி அம்மொடுஞ் சிவணும்" என்

(தொல்-எழு-புள்ளி, 70) பாலை விதியாகக் காட்டினார் முன்னுரைகாரர். அவர் காட்டிய காட்டும் அவர்தம் கருத்தும் பொருத்தம் அல்ல. என்னை? ஆசிரியர் தொல்காப்பியனார் பீர் என்னும் ரவ்வீற்று மொழிக்கு இலக்கணம் சொல்லினாரன்றிப் பீர்க்கு என்ற குவ்வீற்றுச் சொல்லிற்கு இலக்கணம் சொல்லினரல்லர் ஆதலால். "ஈர்க்கு இடை போகா ஏர் இள வன முலை" (பொருநர்-36.) என்றும், "ஈர்க்கிடைபோகா இளமுலை மாதர்தம், கூர்த்த நயனக் கொள்ளையின் பிழைத்தும்" (திருவா—போற்றி—34, 35.) என்றும் கூறிய ஆசிரியர்களின் கருத்தை முன் உரைகாரர், உணர்ந்திலர் போலும். என்னை? அவர், அவ்வாசிரியர்கள் அவ்வடிகளுள் உமாதேவியார்தம் கன்னித் தன்மையைக் கூறவில்லை என்பதனையும் மானிட மகளிர்தம் பொது வியல்பைக் கூறினார்கள் என்பதனையும் அறியாமல் அவ்வடிகளை உமாதேவியின் கன்னித் தன்மைக்குக் காட்டாகக் கொண்டார் ஆதலால்.

3. *உள்வீர் போல நொடிமையி னார்திறம்
கொள்வீ ரல்குலோர் கோவணம்
ஒள்வா ழைக்கனி தேன்சொரி யோத்தூர்க்
கள்வீ ரே!யும காதலே.

முன் பாடம்:—*உள்வேர்.

முன் உரைகாரர் பொழிப்பு:—(ஒள்ளிய வாழைப்பழங்கள் தேனைச் சொரியும் திருவோத்தூரின்கண் எழுந்தருளிய கள்ளத் தன்மையினையுடைய பரமனே! பலி பெறுதற்குரிய தன்மையுடையவரிடத்தே, ஒரு கோவணத்தை, அரையில், அணிந்து, மண்ணுட் சென்று ஊடுருவும் வேர் போலச் சென்று, பலி பெறுவீர். இதுவும் மேற்கூறியனவும் ஆகிய இவை உம்முடைய காதற் செய்கைகளேயாம், எ-று.) என்பது.

பொருள்கோள்:—ஒள் வாழைக்கனி தேன் சொரி ஓத்தூர்க் கள்வீரே! உம காதல் உள்வீர் போல நொடிமையினார் திறம் கொள்வீர்! அல்குல் ஓர் கோவணம் (கொள்வீர்!) ஏ.

இ-ள்:—ஒளி பொருந்திய வாழையின் கனிகள் தேன் போலும் இனிய சாறுகளைச் சொரிகின்ற திரு ஓத்தூரின்கண் பொருந்தி இருத்தலை உடைய இறைவரே! (விரும்பும்

வெறுப்பும் இல்லாதவராகிய நீவிர் நம்முடைய அருளினாலே) விரும்புதலை உடையீர்போல (நம்மை) வாழ்த்துவார்தம் பண்பினை (நம் மனத்துள்) விரும்புதலை உடைய இறையவரே! அல்குல்மீது சிறிய கோவணத்தைச் சார்த்துதலை உடைய இறையவரே! வணக்கம் என்க.

குறிப்புரை:—உள்வீர் - உள்ளுதலை உடையீர், விரும்புதலை உடையீர். நொடிமை - சொல்லுதல், வாழ்த்துதல். நொடிமையினார் - வாழ்த்துவார். திறம் - பண்பு. நலம் எனலும் ஆம். கொள்வீர் - கொள்ளுதலை உடையீர், விரும்புதலை உடையீர். ஓர் - ஒன்று, சிறுமைப் பொருள். கொள்வீர் - கொள்ளுதலை உடையீர், சார்த்துதலை உடையீர். தேன் - (ஆகுபெயர்.) சாறு. சோரி - (வினைத் தொகை) ஒழுகும். "இளவாழை நுதிக் கமழ் தேன் ஒழுகி" (சூளா. சீவய. 232) ஓத்தூர்க்கு - கு, உருபு மயக்கம். அள்வீர் - அள்ளுதலை உடையீர், பொருந்தி இருத்தலை உடையீர். (கள்வீரே எனக்கொண்டு உருவின்றி உறைபவரே - அருபரே எனலும் ஆம்.) காதல் - அன்பு, அருள். "அருள் என்னும் அன்பு ஈன்குழவி" என்பது பொய்யாமொழி. வணக்கம், இசை எச்சம். கொள்வீர் என்பதனைக் கோவணத்தின் முன்னும் கூட்டுக.

சிறப்புரை:—இப்பாவில் அடிகள் சைவர்கட்கு இன்றியமையாத சிறப்பினதாகிய கோவண வேடத்தினைச் சிறப்பித்துக் கூறினார்கள் ஆதலால், அமணர்கட்கு இருப்பின் அமையாத சிறப்பினதாகிய கோவணமும் இல்லாத (நிர்க்கிரந்த) வேடத்தினை வெறுத்தபடியாம். சைவர் நூற்களில் சிவபெருமானை நக்கன் எனக் குறிக்கப்பட்ட இடங்களில் சிலர் அம்மொழிக்கு "நிருவாணன்" (கோவணமும் இல்லாதவன்) எனப் பொருள் கூறுகின்றனர். அவர் கூற்றுச் சைவர் நூற்கட்கும் ஒழுக்கத்திற்கும் முரணாகும். "நக்னன்" என்ற வடசொல்லின் திரியாகிய நக்கன் என்ற மொழி சிவபெருமானைச் சுட்டி நிற்கும் இடங்களில் (மிக்க உடை இல்லாதவன்) கோவணம் ஒன்றனையே உடையாக உடையவன் எனப் பொருள்கோடல் வேண்டும். என்னை? கோவணம் ஒன்றே உடையவனும், மேல் ஆடை இல்லாதவனும், குளிக்குங்கால் (குளித்து) ஈர உடையை உடுத்தி இருப்பவனும் ஆகிய இவர்கள் நக்கன் (நக்னன்) எனற்கு உரியரென்பர் அறிஞர் ஆதலால். நக்கன் என்ற சொல்லைத் தமிழ்

மொழியாகக் கொள்ளின், அம்மொழிக்கு நகைத்தவன் (சிரித்தவன்) எனப் பொருள்கோடல் ஆம். நிற்க,

"நோடிமையினூர்" என்ற தொடரினுக்குப் "பலி பெறுதற்கு உரிய தன்மை உடையார்" என்று பொருள் எழுதினோர் முன்னுரைகாரர். அத்தொடரினுக்கு அப்பொருள் கோடல் தமிழ்த்தேஎத்தில் இல்லாத வொருவழக்கு. குதிரைக்கோடு போல. என்னை ? சில சொற்கள் உடன்பாடு எதிர்மறைகட்குப் பொதுவாகவும், தன்வினை பிறவினைகட்குப் பொதுவாகவும், தற்கிழமை பிறிதின் கிழமைகட்குப் பொதுவாகவும் நிற்பது போலத் தோன்றினும் அவை, பொருள் திரிபுற, வினை திரிபுற, கிழமை திரிபுற, இடம் திரிபுற, பொருள் தருதல் இல்லை ஆதலால். "நொடிமை" என்ற சொல்லுக்குப் பொருளும் இடமும் திரிபுற "பலிபெறுந்தன்மை" எனப் பொருள் கோடல் குற்றம் ஆம். என்னை ? இருத்தல் என்ற சொல்லால் கொள்ளப் படும் பொருளுக்கு நடத்தல் என்ற சொல்லையும், வெண்மை என்ற சொல்லால் கொள்ளப்படும் பொருளுக்குச் செம்மை என்ற சொல்லையும், இயம்புதல் என்ற சொல்லால் கொள்ளப் படும் பொருளுக்கு எற்றல் என்ற சொல்லையும் பெயர்களாக வைத்துப் பொருள்கொள்ளுதல் திரிபாதல் போலச் சொல்லுதல் என்னும் பொருள் கொள்ளுதற்கு உரிய "நோடிமை" என்ற சொல்லுக்குப் "பலி பெறுதற்கு உரிய தன்மை உடையார்" என வினை திரிபுற பெறுதல் என்ற பொருள் கோடலும் திரிபாம். அன்றி, "நோடிமை" என்றசொல்லுக்குப் "பலி பெறுதற்கு உரிய தன்மை உடையார்" என ஐந்து சொற்களால் ஆகிய ஒரு நீண்ட தொடரின் பொருளை விரித்துக் கூறுதலும் நூல் வழக்கன்று.

மற்றும், அவர், திருக்கயிலாயத் திருப்பதிகத்துள்ளே "முடியசடை" என்ற பாவில் செடியுடைய தலையில், வெடிய வினை கொடியர்கெட விடுசில்பலி நோடிய மகிழ் அடிகள் இடமாம்" என்ற தொடரைக் காட்டி "நோடிதல்—பலிபெறுதல்" என்றார். அவர், அத்தொடரினை உடைய பாவிற்கு என்ன பொருள் கொண்டனர் என்பது விளங்கவில்லை. அத்தொடரில் உள்ள "இடு சில்பலி" என்பதனைச் "சில்பலி இடு" என மொழி மாற்றிச் "சில்பலி இடு மகிழ் அடிகள்" எனத் தொடராக்கித் "தாருகாவனத்து முனிவர்தம் மனைவியர்கள், "சிலவாகிய பலியை இடுதற்கு நோடிய (அழைக்க) அதற்கு மகிழ்ந்த அடிகள்" எனப் பொருள் கோடல் வேண்டும் என்பது என் எண்

ணம். அன்றிச், சிலவாகிய பலியை இம்படி நோடிய (கேட்பதற்கு) விரும்பிய அடிகள் எனலும் ஆம். அடிகள் இப்பதிகத்துள் "மிக்கார்" என்ற பாவில் பலிஇடநக்கீரே" என்ற குறிப்பினை இவண் நினைக்க. "நோடிமை—சொல்லல். நோடிய—சொல்ல. (அழைக்க, கேட்க) எனப் பொருள் கோடலே சிறப்பாம். நோடிதல், நோடிமை என்பவற்றுக்குப் பலி பெறுதற்குரிய தன்மை உடையார் எனல் பிழையாம். "உள்வீர்" எனப் பாடங் கொள்ளுதலே சிறப்பாம். என்னை? எதுகை எழிலாலும் பொருள் பொலிவாலும்.

முன்னிருந்த "உள்வேர்" என்ற பாடத்தினையே வேண்டுபவர் "உம காதல் வேர் உள் போல நோடிமையினர்" திறம் கொள்வீர்! அல்குல் ஓர் கோவணம் (கொள்வீர்!)" என முன் இரண்டடிகளையும் மொழி மாற்றிக்கொண்டும், "நோடிமையினர்" என்ற பாடத்தினை "நோடிமையிலார்" எனத் திருத்திக் கொண்டும், மேல் வருமாறு பொழிப் புரைத்துக் கொள்ளுக:— "ஒள்ளிய நிறத்தனவாகிய வாழையின் கனிகள், தேன் போலும் இனிய சாறுகளைச் சொரிகின்ற திரு ஓத்தூரின் கண் பொருந்தி இருக்கும் இறையவரே! வாரமும் ஓரமும் இல்லாதவராகிய நீவிர், நும் அருளினாலே நும்மனத்தகத்தே வேரை (வெகுளியை) உடையீர் போல வெகுண்டு நும்மை வாழ்த்தும் இயல்பு இல்லாதவராய் இகழ்பவருடைய வன்மைகளை அழிப்பவரே! அல்குல்மீது சிறிய கோவணத்தைச் சார்த்துபவரே! வணக்கம்" என்க.

இப்பொழிப்புக்கு உரிய குறிப்புரை:—உள்—இருத்தல்; உடையீர் என்னும் பொருட்டு. வேர் - வெகுளி. "பொள்ளென ஆங்கே புறம் வேரார்" (திருக்கு—487) "வெகுளி என்பர் வேரமும் ஆகும்" (பிங்கலம்—வகை—6. பா—114) அடிகளும் "திகழ் பாலன்மேல், வேர்ப்பது செய்த வெங்கூற் றுதைத்தானும்" (புகலி—தேவா) என வேர் என்னுஞ் சொல்லை வெகுளிப்பொருட்டில் ஆண்டார்கள். நொடிமையினர்—நொடிமை: வாழ்த்துதல், இனர்: (இன்னார் விகாரம்) வருந்துபவர், வாழ்த்துதற்கு வருந்துபவர், வாழ்த்தும் இயல்பு இல்லாதவராய் இகழ்ந்தவர் எனலும் ஆம். திறம்—வன்மை. கொள்ளல், அழித்தல் பொருட்டு. கொள்ளல், சார்த்தல்பொருட்டு. கொள்வீர் என்பதனைக் கோவணத்தின் முன்னுங் கூட்டுக.

4. **தோட்டீரே! துத்தி யைந்தலை நாகத்தை**
ஆட்டீரே! யடியார் வினையை
ஓட்டீ ரே! யுமை யேத்துது மோத்தூர்
நாட்டீ ரே ! யரு ணல்குமே.

முன் உரைகாரர் மொழிப்பு:—(தோடும், புள்ளிகளை யுடைய ஐந்து தலை நாகத்தை யாட்டுதலும், அடியார்களின் வினையைப் போக்குதலும் உடையவராய்த் திருவோத்தூர் நாட்டின்கண் எழுந்தருளிய பரமனே! உம்மை ஏத்துகின்றோம்; ஆகையால் எங்களுக்குத் திருவருள் பாலிப்பீராக, எ-று.) என்பது.

இ - ள்:—திருவோத்தூராகிய திருப்பதியை ஆட்சியாக உடைய இறையவரே! இடக்காதில் தோடு என்னும் அணியை உடையவரே! பொறிகள் பொருந்தி விரிந்தகன்ற படமாகிய தலையை உடைய நாகத்தை ஆட்டுதலை உடையவரே! நும் அடியார்களின் பாபங்களைப் போக்குதலை உடையவரே! நும் அடிமையாகிய என்னுடைய பாபமும் நீங்குதற் பொருட்டு யான், நும்மை வாழ்த்துகின்றேன். எனக்கும் அருள் செய்வீராக என்க.

குறிப்புரை:—தோடு, இடக்காதில் அணியப்படும் அணி. துத்தி - பொறி. ஐ - (பை என்னும் சொல்லின் விகாரம்) படம். மலர் அலர் ஆனுற்போல மொழி முதல் மெய் கெட்டதெனக் கொள்ளுக. ஐ + தலை, ஐந்தலை - பைபோன்ற தலை, படமாகிய தலை. "பைவிரிதுத்திப் பரிய பேழ்வாய் நாகம்" (நள், ஆல-தேவா) ஆட்டீர்-ஆட்டுதலை உடையீர், ஆட்டுபவரே. "சிவ பெருமான் திருக்கூத்து ஆடுங்கால் அப் பெருமான்மீது அணியப் பட்ட நாகமும் ஆடும். அந்நாகத்தின் செயலை அதன் செய லுக்கு ஏது வானவனாகிய அப்பெருமான் மீது ஏற்றிக் கொள்ளுக. "ஆடு அரவு ஆட ஆடும் எம் அடிகள்" (அச்சிறு-தேவா.) ஆட, காரியப் பொருட்டு. ஓட்டீர்-ஓட்டுதலை உடையவரே. ஏத்துதும்-(ஒருமையில் பன்மை மயக்கம்) வாழ்த்துகின்றேன். நாட்டீரே, நாடு-திருப்பதி. அருள் நல்கும்-அருள் செய்வீராக. ஏ, அசை.

சிறப்புரை:—பண்டு வடவர் மகளிர் ஒரு காதில் தோடும், ஒரு காதில் குழையும் அணிதல் வழக்குப்போலும். *என்னை?* "*செய்விலைப் பசும்பொன்* தோடும் *நிழல்மணிக்* குழையும் *நீவி,*

மைவிரி குழலினாளை" (சீவகசிந்-488.) "வாணுதல் பட்டம் மின்ன வார்குழை திருவில் வீசப் பூண்முலைப் பிறழப் பொன் தோடு இடவயின் நுடங்க" (சீவகசிந்-1257.) "தோடு கொண்டு ஒரு செவி விளங்கத் துளங்குவ மகரம் ஒன்று ஆட" (நீலகேசி-67.) என இரு ஆசிரியர்களும் ஒரு காதில் தோடும், ஒரு காதில் குழையும் ஆகக்கூறி இருவகைக் காது அணிகளால் மகளிரையே சிறப்பித்தார்கள் அல்லாமல், அவர்கள், ஒரு காதில் தோடும், ஒரு காதில் குழையும் ஆகக்கூறி ஆடவர்களை இருவகைக் காது அணிகளால் ஓரிடத்தும் சிறப்பித்திலர் ஆதலால்.

ஆசிரியர் தோலாமொழித்தேவர் "மாடெலாம் எரிந்து மின்னும் வயிரக் குண்டலந்தோடு அம்பொன், தோடுலாம் துளங்கித் தோன்றும் சுடிகைவாண் முகத்து நல்லார்" (சூளா-சீயவ-104.) "மகரப் பைம்பூண் மடவார்கள் வயிரக் குழையும் பொன் தோடும்" (சூளா-அரசி-347.) என மகளிர், தம் இரு காதுகளிலும் ஒரு காதில் தோடும் ஒரு காதில் குழையும் ஆக இருவகை அணிகளை அணியும் வழக்கத்தினைக் கூறிச் சிறப்பித்தனர். ஆயினும் அவ்வாசிரியரே, ஆடவனைச் சிறப்பிக்குங்கால் "மணி குண்டலங்கள் இருபாலும் வந்து வரையாகம் மீது திவளத், துணி கொண்டு இலங்கு சுடர் வேலினோடு வருவான் இது என் கொல் துணிவே" (சூளா-அரசி-197.) என ஆடவர்கள் தங்களுடைய இரு காதுகளிலும் குண்டலம் அல்லது குழை ஆகிய ஒருவகை அணியையே அணியும் வழக்கினைக் கூறிச் சிறப்பித்தனர். ஆதலால், பண்டு, வடவர் மகளிர் ஒரு காதில் தோடும் ஒரு காதில் குழையும் அணிதல் வழக்கு என்றும், அவ்வட ஆடவர்கள், தங்களுடைய இருகாதுகளிலும் குண்டலம் (குழை) என்ற ஒரு வகை அணியையே அணிதல் வழக்கு என்றும் கொள்ளுக. இவ்வேதுக்களினால், ஆடவர்கள் தம்முடைய இரு காதுகளிலும் ஒரு காதில் தோடும், ஒரு காதில் குழையும் ஆக இருவகை அணிகளையும் அணிவர் என்ற முன் உரைகாரர் கூற்று வழுவாம் எனக் கொள்ளுக. "ஒரு குழை ஒருவன் போல" (கலி—26, 105.) எனப் பலராமனைச் சிறப்பு நோக்கி இனம் பிரித்துக் கூறியதாலும் பிற ஆடவர் இருகாதுகளிலும் குழையாகிய ஒரு வகை அணியை அணிதலே வழக்கு எனக் கொள்ளுக. சிறப்பு நோக்கி என்றது என்னை? "பலராமன், யமுனையால் அளிக்கப்பட்டதும் மிகச் சிறந்ததுமான ஒரு குண்டலத்தை அணிந்தனன் என்பது புராண கதை" என்றார்கள் ஆசிரியர் பிரம்மஸ்ரீ இ. வை. அநந்தராமையர்

அவர்கள். (தம் கலித்தொகைப் பதிப்பில், கலி-105-உரை.) அக்கதையின் விரிவை வல்லார் வாய்க் கேட்டுணர்க. சிவ பெருமான் சக்தி, சிவம் ஆகிய இருவகை உருவன் என்பதற்கு ஏற்பச் சைவ சமயாசிரியர்கள் தங்கள் தேவாரங்களில் அப்பெருமானைச் சிறப்பித்துக் கூறுங்கால் ஒரு காதில் தோடும், ஒரு காதில் குழையும் ஆக இருவகைக் காது அணிகளாலும் சிறப்பித்துக் கூறினார்கள் போலும். ஒரு காதில் தோடும் ஒரு காதில் குழையும் ஆக இரு காதுகளிலும் இருவகை அணிகளை அணிதல் தமிழ் மகளிர்தம் வழக்கன்று. என்னை ? பண்டைய தமிழ் நூற்களுள் கூறப்படாததால். முன்னுரைகாரர், தமிழர்தம் வழக்கு அல்லாததாகிய ஒரு காதில் குழையும் ஒரு காதில் தோடும் ஆக இரு காதுகளிலும் இருவகையாக அணிகளை அணியும் வழக்கத்தைத் தம் உரையிடையே எடுத்துக் காட்டியதன் ஏது விளங்கவில்லை. அவர், தோடு பெண்களுக்கும் உரித்து (பக் 28.) என்றதனுலும், "வாணுதற் பட்ட மின்ன" (சீவகசிந்-1257) என்ற தொடரையும், "தோடகமா யோர் காதும் ஒரு காது இலங்கு குழை தாழ" (நறை—தேவா) என்ற தொடரையும் எடுத்து ஆண்டதாலும் ஆடவரும் தோடு என்னும் அணியை அணிவர் என்பது அவர்தம் கருத்துப் போலும். அப்படி கருதுதலும் தவறேயாகும்.

நாகத்தை ஆட்டீர் என்றதற்குத் தலபுராணத்தில் இறைவன் பாம்பாட்டியாக வந்து சமணர்கள் அடிகள் மீது ஏவிய பாம்பின் வன்மையைக் கெடுத்து அப்பாம்பினை ஆட்டினன் என்ற கதையைக் குறித்தபடி எனலும் ஆம். தேவாரங்களில் ஐ + தலை நாகம், ஐந்தலை நாகம் எனவரும் இடங்களில் (பை + தலை) பைத்தலை என்றசொல்லின் திரிபாகக்கொண்டு பையாகியதலை, பைபோன்ற தலை, பையை உடைய தலை + நாகம் எனவும், ஐவாய் நாகம் என வரும் இடங்களில் மைவாய் அல்லது பை வாய் என்ற சொற்களின் திரிபாகக் கொண்டு நஞ்சு பொருந்திய வாயையுடைய நாகம், அல்லது பை போன்ற வாயையுடைய நாகம் எனவும் பொருந்தும் வழி அறிந்து பொருள்கோடல் வேண்டும் என்பதூஉம், ஐ என்ற மொழிக்கு ஐந்து என எண்ணல் அளவையால் பொருள் கோடல் உண்மைப் பொருள் அன்றும் என்பதூஉம் என் நம்பிக்கை. என்னை ? இருதலை நாகம் மூத்தலை நாகம் எனவும், இருவாய் நாகம், மூவாய் நாகம் எனவும் பலவாகத் தலையையும், வாயையும் எண்ணல் அளவையால் இயம்பும் வழக்குப் பண்டைய நூற்களுள் இன்மையால்.

5. குழையார் காதீர் கொடுமழு வாட்படை
உழையாள் வீர்திரு வோத்தூர்
பிழையா வண்ணங்கள் பாடிநின் றாடுவார்
அழையா மேயரு ணல்குமே.

முன் உரைகாரர் மொழிப்பு:—(குழை அணிந்த காதினையுடையீராய், கொடிய மழுவாயுதத்தையும், மானையும் ஏந்துகின்ற பரமனே! திருவோத்தூரின்கண் மூவகை வண்ணங்களும் பொருந்திய பாட்டுக்களைப் பிழையின்றிப் பாடி, திருமுன் நின்று ஆடும் அடியவர், தேவரீரைக் குரலிட்டு அழையாதவாறு அவர்களுக்கு அருள் நல்குதல் வேண்டும். எ-று.) என்பது.

பொருள்கோள்:—பிழையா வண்ணம் கள் பாடி நின்று ஆடுவார் அழையாமே அருள் நல்கும் கொடு மழு வாள் படை குழை ஆர் காதீர்! திரு ஓத்தூர் உழை ஆள்வீர்! ஏ.

இ-ள்:—அன்பு பொருந்திய மனத்தினராய் நம்முடைய புகழைச்சொல்லி ஆநந்தத்தால் குதித்துக் கூத்து ஆடுவாராகிய நம் அடியார்கள், இடையூறு உற்று ஐயோ எனக்கூவி வருந்தாதபடி அவர்கட்கு அருள் செய்கின்ற, கொடிய பரசாகிய ஒள்ளிய படையையும், குழைபொருந்திய காதினையும் உடைய இறையவரே! திரு ஓத்தூராகிய திருப்பதியை ஆட்சியாகக் கொண்ட இறையவரே! வணக்கம் என்க.

குறிப்புரை:—குழை, வலக்காதில் அணியப்படும் அணி. ஆர்-பொருந்திய. குழையார்காதீர் - (குறிப்பு வினையாலணையும் பெயர்) இறையவரே. மழு-பரசு. வாள்-ஒளி. மழுப்படை, இருபெயர் ஒட்டு. மழுவாள், இருபெயர் ஒட்டெனலும் ஆம். உழை, ஏழனுருபு. "சூலமொடு ஒண்மழு ஏந்தி" (வேட்-தேவா.) பிழையா வண்ணம்-வஞ்சனை இல்லாத இயல்பினராய், அன்பு பொருந்திய மனத்தினராய். கள், அசை. பாடி-சொல்லி. நின்று, (இடைச்சொல்) அசை. ஆடுவார்-அடியார். அழைத்தல்-கூவுதல். (நீலகேசி-20-உரை) அழையாமே-கூவாமே, கூவிவருந்தாதபடி. "அருள் நல்கும் காதீர்" என முடிக்க. "அருள் செய்கின்றவரும் காதினை உடையவரும் ஆகிய இறையவர்" என முடித்தலும் ஆம். வணக்கம், இசையெச்சம்.

சிறப்புரை:—மழு என்னும் பொருளின் விளக்கத்தினை முதற் பாவின் சிறப்புரைப் பகுதியுள்காண்க. இவ்வகைப்பொருள்

கோடல் அன்றி, வருந்துவான் ஒருவனுக்கு அயலான் ஒருவன் ஏதுவின்றி ஒரு கடவுளை அருள் செய்யும்படி ஏவினன் எனல் சிறப்பில் பொருளாம். என்னை? அருளும்வகையை அருளையுடைய அப்பெருமானே அறிகுவன் ஆதலால். சைவசமய ஆசிரியன்மார் மூவரும் முறையே பாம்பின் நஞ்சால் இறந்துபட்ட மருகல் வணிகனையும், அப்பூதி நாயனார் மகனையும், பல ஆண்டுகளின் முன் முதலையால் விழுங்கப்பட்ட பார்ப்பனச் சிறுவனையும் உயிர் பெற்று எழும்படி செய்ய இறையவனிடம் விண்ணப்பித்துப் பாடிய செயல், இறையவனைப் பிறர்பொருட்டு அருள்செய்யும்படி ஏவிய செயலன்றோ எனின், அன்று. என்னை? அவர்கள்செயல், இறந்துபட்டவர்களின் சுற்றத்தினர் மாட்டுக்கொண்ட இரக்கத்தால் ஆகிய சிறப்புச் செயலாம். பொதுச் செயலன்று ஆதலால்.

இப்பாவிற்கு மற்றும் ஒரு பொருள்: "குழை பொருந்திய காதினை உடையீரும் கொடிய மழுவாகிய ஒள்ளிய படையையும், மானையும் ஆட்கொண்டீரும் ஆகிய திருஓத்தூரின்கண் எழுந்து அருளிய இறையவரே! என, அன்பு பொருந்திய மனத்தினராய்ச் சிவபெருமான் உடைய புகழைச் சொல்லி ஆநந்தத்தால் குதித்து ஆடுவார் ஆகிய அடியார்கள் துன்புறுங்காலங்களில் அவ்வடியார்கள், இறையவரே! எம்மைப் பாதுகாக்க வேண்டும் எனத் தம்மை அழைக்காமுன்னே தாமே தம்அருளைச் செலுத்தி அவர்களுடைய துன்பங்களைப் போக்குவர்" எனலும் ஆம்.

6\. மிக்கார் வந்து விரும்பிப் பலியிடத்
தக்கார் *தமக்களீ ரென்று
உட்கா தாருள ரோ?திரு வோத்தூர்
நக்கீ ரே!யரு ணல்குமே.

முன்பாடம்:—*தம்மக்க ளீரென்று.

முன் உரைகாரர் பொழிப்பு:—(சிவனடியார்களாகிய உயர்ந்தோர் தம் மனைவாயிலில் வந்து நின்று, தம்மை யேற்று விரும்பிப் பலியிடுமாறு, "தக்கோருடைய மக்காள்!" என்று கூறி யழைத்தால், கேட்டு, அவரை உபசரிக்குங்கால் குற்றம் நிகழா வண்ணம் அஞ்சி ஒழுகாதவர் உளரோ; இலர்; ஆகலின், திருவோத்தூரின்கண் எழுந்தருளிய நக்கவேடம் பூண்ட பரமனே! தேவரீர் திருவருள் புரிதல் வேண்டும். எ-று.) என்பது.

ORIENTAL INSTITUTE LIBRARY TIRUPATI

பொருள்கோள்:—மிக்கார் விரும்பி வந்து பலி இட நக்கீரே! திரு ஓத்தூர் தக்கார் தமக்கு அளீர் என்று உள்காதார் உளரோ? அருள் நல்கும் ஏ.

இ-ள்:—கற்பின் சிறந்தாராகிய தாருகாவனத்து முனிவர்தம் மனைவியர், அன்பு மிக்காராய் நம்முன் வந்து ஐயம் இட அவர்களைக் கண்டு நகைத்தவரே! திரு ஓத்தூரின்கண் எழுந்தருளிய இறையவரே! தேவர்கோன் முதலிய பெருமை மிக்காருள் எவரேனும் தங்கட்கு அருள் செய்யவேண்டும் என்று நும்மைத் தம்மனத்துள் நினையாதவர் ஒருவர் உளரோ? இலர். ஆதலால், நும் அடிமையாகிய யான் எனக்கும் நீவிர் அருள் செய்யவேண்டும் என நும்மை வணங்குகின்றேன் அருள் செய்வீராக என்க.

குறிப்புரை:—மிக்கார்-கற்பின் சிறந்தார். விரும்பி-அன்பு மிக்காராய். வந்து-முன்வந்து. பலி-உணவு, ஐயம். தக்கார்-பெருமைமிக்கார். அளீர் - (அளியீர் விகாரம். ஈர்: ஏவற் பன்மை விகுதி) அளிப்பீராக, அருள் செய்ய வேண்டும். உட்காதார்-உள்காதார், நினையாதார். உளரோ-(ஓ, எதிர்மறை) இலர். திரு ஓத்தூர், (ஆகு பெயர்) இறையவர். திரு ஓத்தூரீர் விகாரம் எனலும் ஆம். நக்கீரே-நகைத்தவரே. அருள் நல்கும்-அருள் செய்வீராக. யானும் வணங்குகின்றேன், இசையெச்சம்.

சிறப்புரை:—தக்கார்தம் மக்களீர்எனப் பாடங் கொள்ளுதலும், பலி வேண்டுவோர் பலி இடுவோரைத் தக்கோருடைய மக்காள் என அழைப்பார் என்று கூறுதலும் மரபு வழுவாம். என்னை? அவ்வகை அழைப்பு நம் தேசத்தில் எவ்வகை மதத்தாரிடத்தும் இல்லை ஆதலால். "உயர்திணை என்மனார் மக்கள் சுட்டே" என்றார் ஆசிரியர் தொல்காப்பியனார். ஆதலால், மக்கள் என்பது ஆண், பெண் ஆகிய இருபாலாரும் விரவிய பலர்பால் பெயராம். ஆகவே, ஐயம் வேண்டுவோர் ஆணொழித்து மகளிரிடத்து வேண்டாமல் இருபாலாரிடத்தும் வேண்டுவோர் எனலும் பொருத்தமின்றாம் "மக்களீர் என்பது பெருப்பான்மையும் ஆணொழிந்து நின்றது" என்றார் முன்னுரைகாரர். அவர், அவ்வகை நுண்பொருளை எந்நூலகத்துக் கண்டனர் என்பது விளங்கவில்லை. அவர்தம் பொழிப்பு உரையின்படி எவரது ஒழுக்கத்திற்கு எவருக்கு அருள் செய்யவேண்டும் என்பதும் விளங்கவில்லை. இத்தகைய பொழிப்பும் பழிப்பில் பொழிப்பாமே.

7. தாதார் கொன்றை தயங்கு முடியுடை
நாதா வென்று நலம்புகழ்ந்து
ஓதா தாருள ரோ?திரு வோத்தூர்
ஆதீ ரே!யரு ணல்குமே.

முன் உரைகாரர் பொழிப்பு:—(திருவோத்தூரின்கண் எழுந்தருளியுள்ள முதல்வரே! தேன் நிறைந்த கொன்றைமாலை விளங்குகின்ற முடியையுடைய தலைவா! என்று உம்முடைய நலங்களைப் புகழ்ந்து ஓதித் துதிக்காதவர்கள் உண்டோ? இல்லை. ஆகையால், தேவரீருடைய திருவருளாகிய பரமுத்தியைக் கொடுத்தருளுவீராக. எ-று.) என்பது.

பொருள்கோள்:—திரு ஓத்தூர் ஆதீரே! தாது ஆர் கொன்றை தயங்கும் முடி உடை நாதா! என்று நலம் புகழ்ந்து அருள் நல்கும் ஓதாதார் உளரோ? ஏ.

இ-ள்:—திரு ஓத்தூரின்கண் எழுந்தருளிய முதல்வரே! என்றும், இதழ்கள் பொருந்திய கொன்றை மலர்களை விளங்கும்படி சூடிய முடியை உடைய தலைவரே! என்றும், நம் பெருமையைப் புகழ்ந்து சொல்லித் தமக்கு அருள் செய்ய வேண்டும் என்று நம்மைக் கேளாதவரும் உளரோ? மூவுலகினும் இலர். ஆதலால், நம் அடிமையாகிய யான், எனக்கும் நீவிர் அருள் செய்ய வேண்டும் என நம்மை வணங்குகின்றேன் அருள் செய்வீராக என்க.

குறிப்புரை:—தாது - (ஆகுபெயர்) இதழ். தேன் எனலும் ஆம். ஆர்-பொருந்திய. தயங்கல்-ஒளிர்தல். நாதா-(வடசொல் திரிபு, விளி.) தலைவரே. பன்மையில் ஒருமை மயக்கம். நலம்-பெருமை. ஓதுதல்-மொழிதல். ஓதாதார்-மொழியாதார், கேளாதவர்; உளரோ - (ஓ, எதிர்மறை,) இலர். ஆதீரே- (ஆதியீரே விகாரம்) முதல்வரே. அருள் நல்கும்-அருள் செய்வீராக. ஏ, அசை.

சிறப்புரை:—முன் உரைகாரர்தம் உரைச்செயல், உழைப்பாளி செய்த தொழிலுக்குரிய கூலியைத் தனக்குக் கேட்கும் விழிப்பாளியின் செயலொடு ஒப்பதாம் என ஒழிக்க. அவர் தம், முற்பாவின் (6-வது பாவின்) உரையையும் இவ்வகையே கொள்ளுக. என்னை? அவர்தம் பொழிப்பு உரையை ஆழ்ந்து சூழ்ந்து நோக்குக.

8. என்று நிம்மலை யென்ற வரக்கனை
வென்றார் போலும் விரலினால்
ஒன்றார் மும்மதி லெய்தவ னோத்தூர்
என்றார் மேல்வினை யேகுமே.

முன் உரைகாரர் பொழிப்பு:—("இம்மலைதான் எனக்கு யாதாகும்!" என்று கூறி, அதனை எடுக்க முயன்ற அரக்கனாகிய இராவணனைத் தம் கால் விரலை யூன்றி வென்றவரும், பகைவராகிய திரிபுரத்தசுரர்களின் மூன்று மதில்களையும் அம்பை எய்து அழித்தவருமாகிய பரமனுடைய திருவோத்தூர்" என்று சொல்லிப் புகழ்பவருடைய, இனிமேல் அனுபவிக்க வேண்டிய வினைப்பயன் அவரை விட்டு நீங்கிப் போகும், எ-று.) என்பது.

பொருள்கோள்:—இம்மலை என்று ஆன் என்ற அரக்கனை எனவும், விரலினால் வென்றார் போலும் எனவும் மொழி மாற்றுக.

இ-ள்.—இராவணன், தான் சென்ற வழியில் தடையாய்க் குறுக்கிட்டு நின்ற கயிலை மலையைப் பெயர்த்து எறிவான், இம்மலை என்வன்மைக்கு எம்மாத்திரம் என்று வன்மை பேசியவனாய் அம்மலையைப் பெயர்க்க அசைத்த போது அம்மலையின் தலையில், தன் காலின் விரல் ஒன்றனை ஊன்றி அவ்வரக்கன் வலியைக் கெடுத்தவரும், பகைத்தவர் தம் மூன்று மதில்களையும் ஒரே அம்பினை எய்து எரியும்படி செய்து அழித்தவரும் ஆகிய இறையவர் எழுந்தருளிய இடமானது திரு ஓத்தூராகிய திருப்பதி என்று சொல்லிப் புகழ்வாரைப் பாவங்கள் பற்றாமல் நீங்கும். ஆதலால், என் பாவமும் நீங்கும்பொருட்டு யானும் புகழ்கின்றேன் என்க.

குறிப்புரை:—என்று, எற்றுவிகாரம். எற்று—எம்மாத்திரம். ஆன், அசை. அரக்கன், இராவணன். வென்றார், இறைவர். வென்றன் என இருப்பின் சிறப்பாம். போலும், ஒப்பில் போலி. ஒன்றாமை, பொருந்தாமை. ஒன்றார் - (அன்பு) பொருந்தாதவர், பகைவர். எய்தவன், (ஒருமையில் பன்மைமயக்கம்) இறைவர். என்றார்மேல் - (மேல், உருபு மயக்கம்) என்றாரை. வினை - (தீவினை விகாரம்) பாவம். ஏகும்-நீங்கும். ஏ-அசை.

சிறப்புரை:—இராவணன், கயிலை மலையைப் பெயர்த்த நிகழ்ச்சியைச் சிவமகாபுராணம் வேறுவகையாகக் கூறும். இராமாயணம் - உத்தரகாண்டம் - வரையெடுத்த படலத்துள் 140.

வது பாவின் "பிறைச்சடை முடிக்கடவுள் பொன்திருவடி பெரு விரல் தலையினல், நெறுக்கென அழுத்திட உடல் பொறைபதைப்ப நிருதர்க்கு இறைவனும்" என்ற இடையடிகள் இரண்டனையுங் காட்டி: "நெருக்கென அழுத்துவதைவிடப் பைய ஊன்றுதலே பரமனுடைய பெருங்கருணைச் செயலாகும்" என்றார் அன்றி, அதற்குக் காட்டாக "உரம்நெரிய மெள்ளவிரல்வைத்து" (தோணி—தேவா.) என்ற தொடரையும் காட்டினார் முன்உரை காரர். அவர், திருக்கயிலாயத் திருப்பதிகத்துள், "அரக்கன் உணராது, ஒருத்தியை வெருக்கூற வெருட்டலும், நெருக்கென நிறுத்த விரலால்" என்ற தொடரில் உள்ள நெருக்கென என்பதற்கு யாது பொருள் உரைப்பரோ! நிற்க, அடிகள், பைய என்ற சொல்லை இப்பாவினுள் ஆண்டிலர். ஆதலால், அவ்வுரைகாரர், பைய ஊன்றுதல் என்ற குறிப்பை எதன் பொருட்டு எவரைக் குறைகூறுவான் அவ்வுரையிடைக் குறித்தார் என்பது விளங்கவில்லை. அன்றியும், "நெறுக்கென" என்று எதுகையிடத்து நின்ற சொல்லை "நெருக்கென" எனவும், அப்பாவின் 140-வது எண்ணை 71-வது எனவும், மாற்றியதன் ஏதுவும், இராமாயணம் உத்தரகாண்டத்தின் ஆசிரியர் கம்பர் என்றதன் ஏதுவும் விளங்கவில்லை. நிற்க, அப்பாவின் எண் 71 என்ற குறிப்பால் அவர் முழுநூலைப் பார்த்தவர் அல்லர் என்பதும், பள்ளிச்சிறுஅர் கட்காகத் திரட்டப்பட்டதாகிய தொகைநூலைப் பார்த்தவர் என்பதும் தெரிகின்றன. கம்பர் பைய எனச் சொல்லத் தெரியாமல் நெருக்கெனக் கூறினர் என அவரைக் குறை கூறுதற்குக் கம்ப ராமாயணம் என்றார்போலும். என்னை? தாம் கம்பரை வைதால் தம்மைப் பிறர் பெரிய அறிஞர் என மதிப்பர் என்பது அவர்தம் எண்ணம் போலும். அவர் காஞ்சியில் ஒரு கூட்டத்தில் கம்பர் சேக்கிழாரைப் பாடாததால் அவர், ஒரு புலவரல்லர் எனவும், உமாபதிசிவமும், மீனுக்ஷிசுந்தரம் பிள்ளையும் பெரும் புலவர்கள் ஆகையால் அவர்கள், சேக்கிழாரைப் பாடினர்கள் எனவும் கூறியதனை யானே நேரில் கேட்டேன். அன்றி, அவர், பிறரை வைதலே தமக்குப் புகழாதற்கு ஏது என்ற எண்ணத்தைக் கொண்டவர் எனப் பிறவகையாலும் யான் நம்புகின்றேன்.

இராமாயணம், உத்தரகாண்டத்தின் ஆசிரியர் "நெறுக்கென" என்றது விரைவுப்பொருட்டு என்றும், அடிகள், தம் தேவாரத்தில் "உரம்நெரிய மெள்ள விரல் வைத்து" (தோணி-தேவா.) என்றது மென்மைப் பொருட்டு என்றும் கொள்ளல் வேண்டும். என்னை? அடிகளும் "அரக்கன் உணராது, ஒருத்

தியை வெருக்குற வெருட்டலும் நெருக்கென நிருத்த விரலால்" என்றார்கள் ஆதலால். அவ்விரு ஆசிரியர்தம் கருத்துக்களின் வேற்றுமைகள், ஆசிரியர் கவிச் சக்கரவர்த்தியாராகிய கம்பர்தம் புலமையை அளவிட்டு அறிந்து அவர்களைப் (பொய்ந்நெறியால்) புறக்கணித்துப் புகலும் புலமையார்க்குப் புலப்படாது போதலும் ஒரு புதுமையே ? அவர் புலமை உடையர் அல்லர் போலும். என்னை? புலமை உடையார் பிறரைப் பழியார் ஆதலால். **புகழ்ச்சிக்குரிய பலவின் கனியும் கருப்பங் கழியும் இனித்தலும், இகழ்ச்சிக்குரிய எட்டிக்கனியும் வேப்பங் குழையும் கைத்தலும், அதனதன் பிறவிப் பண்பே, அதுபோல ஒருவரை ஒருவர் புகழ்தலும் ஒருவரை ஒருவர் இகழ்தலும் அவரவர் பிறவிப்பண்பேயாம்.** ஆகவே, "தவமும் தவமுடையார்க்கு ஆகும் அவம் அதனை, அஃதிலார் மேற்கொள்வது" (திருக்கு—262) "நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக், குலத்தின்கண் ஐயப்படும்" (திருக்கு-958) என்ற பொய்யா மொழிகளைப் போற்றிப் பொற்பிலார் புல்லுரைகளைப் புறக்கணித்தலே நற்புறு செயல் என்பர் நன்னெறியறிந்த நாவலர். ஆதலால், அத்தகையார்தம் பழிப்பைமறக்க. நிற்க,

அவ்வுரைகாரர், தம்மால் காணப்பட்ட நூற்கள் பலவற்றினின்றும் ஒவ்வொருசொல்லை ஒவ்வொருதொடரை அச்சின்னஞ் சிறுநூலுள் புகுத்திக்காட்டிப் பலநூற்களைக் கற்றாரொடு தாமும் பெருமைபெற வெண்ணிய தம் பேரவாவால் பிழைசெய்தார் போலும். என்னை ? "கல்லாத மேற்கொண்டு ஒழுகல் கசடு அற வல்லதூஉம் ஐயம் தரும்" என்பதூஉம் "அரங்கின்றி வட்டாடியற்றே நிரம்பிய, நூலின்றிக் கோட்டிகொளல்" என்பதூஉம் பொய்யா மொழிகள். அவைகளை அவர் அறிந்திலர் ஆதலால்.

இப்பாவிலுள்ள ஒன்றார் என்ற சொல் உடன் பாட்டுப் பொருளைத்தரும் சொல்போல நின்று எதிர்மறைப் பொருளைத் தந்து நிற்பதற்குத் **"தூய ஆன்பாலில் நீலமணியைப் பெய்தவிடத்து அது (அப்பால்) கெடுதலும் பின்னர் அம்மணியை நீக்கினும் பாலின் கேடு நீங்காது நிற்றலும் போல"** என ஒரு உவமையைக் கூறினார் முன்னுரைகாரர். தன்கண் நீலமணியைப் பெய்த காலத்தில் தன் வெள்ளிய வண்ணத்தின் திரிந்தபால் தன்கண் பெய்யப்பட்ட அந்நீலமணியை நீக்கிய பின்னரும் தன் வெள்ளிய வண்ணத்தின் திரிந்தே நிற்கும் எனல் பிழையாம். என்னை ? பாலில் பெய்யப்பட்ட நீலமணியை நீக்கிவிடின் அப்பால் தன் வெள்ளிய வண்ணத்தையே பெற்று நிற்கும் ஆதலால்.

அவரால் கூறப்பட்ட உவமையால் அவர், சீவக சிந்தாமணி என்ற நூலின் உரைக் குறிப்பினைப் பார்த்தவர் என்பதும், அக் குறிப்பினை எழுதிய ஆசிரியர்தம் கருத்தினை அறியாதவர் என் பதும் அறியப்படுதல் அல்லாமல், அவ்வுவமை, உவமேயத்திற் குப் பொருந்தியதாகத் தோன்றவில்லை. என்னை ? நீலமணியை ஆய்ந்து அதன் நலன் தேர்பவர், அம்மணியைப் பாலில் இட்டு அதன் பண்பினை அறிவர் என்றும், நீலமணியைப் பாலில் பெய்த காலத்தில் அப்பால் முற்றும் நீலவண்ணமாகத் திகழ்ந்து தோன் றும் என்றும், அம்மணியைப் பாலினின்றும் நீக்கிவிடின் அப்பால் தன் உண்மையான வெள்ளிய வண்ணத்தோடும் விளங்கித் தோன்றும் என்றும் கூறுவர் அறிஞர் ஆதலால். சீவக சிந்தாமணி யின் 167, 1325-ம் பாக்களையும். ஆசிரியர் பரஞ்சோதி முனி வர்தம் திருவிளையாடல் - மாணிக்கம் விற்ற படலம் 73-ம் - பாவையும் அவைகளின் உரைகளையும் பார்க்க. நிற்க,

வெள்ளிய பாலில் நீல மணியைப் பெய்த காலத்தில் அப் பால் தன் நிறத்தின் திரிந்து நிற்பதுபோல ஒரு உடன்பாட்டுச் சொல்லில் எதிர்மறை விகுதி புணருங்கால், அச்சொல், உடன் பாட்டுப் பொருளைத் தராமல் எதிர்மறைப் பொருளைத் தரும் சொல்லாகத் திரிந்து நிற்கும் என்பதற்கும், பாலில் இடப்பட்ட நீல மணியை, அப்பாலின் நின்றும் நீக்கியபின் அப் பால் தன் பண்டைய வெள்ளிய வண்ணத்தினையே பெற்று நிற்பதுபோல உடன்பாட்டுச் சொல்லொடு புணர்ந்த எதிர்மறை விகுதி கெடுங் கால், அவ் வுடன்பாட்டுச்சொல் எதிர்மறைப் பொருளைத் தரா மல் உடன்பாட்டுப் பொருளையே தரும் என்பதற்கும் அவரால் கூறப்பட்ட உவமை ஒப்பாகுதலன்றி, தன் வண்ணம் திரிதற்கு ஏதுவான நீலமணியைத் தன்னின் நின்றும் நீக்கிவிடின் தன் வண்ணத்தின் திரிதல் இல்லாத பாலின் பண்பு, தன்னொடு புணர்ந்த எதிர்மறை விகுதி நீங்கினும் தனக்குரிய உடன்பாட்டுப் பொருளைத்தராமல் எதிர்மறைப் பொருளையேதரும் உடன்பாட் டுச்சொல்லின் பண்பிற்கு எவ்வகையால் ஒப்பாகும் ? நிற்க,

எதிர்மறைவிகுதி புணர்ந்துகெட்டதால் விகாரப்பட்ட தாகிய "ஒன்றார்" என்ற எதிர்மறைச் சொல்லுக்குப் பாலில் நீல மணியைக் கூட்டுதலையும் பிரித்தலையும் சுட்டிக் காட்டிய காட்டு, உவமை வகையால் பொருத்தம் அற்றதாகும். என்னை ? மேலே கூறிய ஏதுக்களால். அவ்வகைப் பொருத்தம் அற்ற காட்டுக்களைக்

காட்டுதலைத் தர்க்கநெறி யறிந்தார் "தானே தன்பக்கம் அழியக் கூறுதல்" ஆகிய "இட்டவிரோதம்" என்னும் குற்றமாம் என்பர்.

அவர் கூறிய உவமையை அறிஞர் எவரும் ஏற்கார். ஏற்புடைத் தாம் என்றார் உரைச் சிறப்புப் பாயிரக் காரர் ஒருவர் எனின், "வாரம் பட்டுழித் தீயவும் நல்லவாம்" (சீவகசிந் - 888.) என்பது ஆன்றோர்தம் திருமொழி ஆதலால், அவர்தம் கூற்றினை அவர் போன்றாருக்கே ஆகும் என அகற்றுக.

* அவ் வுரைச் சிறப்புப் பாயிரக்காரர், அவ்வுரைகாரர் மாட்டுவாரம் கொண்டனரோ? ஆம். என்னை? அவரால் கூறப்பட்ட உரைச் சிறப்புப் பாயிரத்துள் ஏதுக்கள் பல உண்டு. அவற்றுள் ஒன்றனை இவண் காட்டாக நாட்டுகின்றேன். முன் உரைகாரர், தம் உரைப்பாயிரத்துள் (பக்—19.) "தேவாரம் என்பதன் பொருள்" என்ற 3-ம் பகுதியுள் தேவாரம் என்ற தொடரைப் பலவகைப் பொருள் கோடற்கு ஏற்றவாறு கண்ணழித்துக்கொள்ளும் முறைகளைச் "சைவத்திரு, சுவாமிநாத பண்டிதர் அவர்களால் எழுதப்பட்டபடி இங்குக் கூறுதும்" எனக் குறித்தார். அக்குறிப்பினுக்கு மாறாக அவ்வுரைச் சிறப்புப் பாயிரக்காரர், அவ்வுரைகாரரே தேவாரம் என்ற தொடரைப் பலவகைப் பொருள் கோடற்கு ஏற்பக் கண்ணழித்துக் காட்டினார் என்று அவ்வுரைகாரருக்கு ஒரு பெருமையைக் காட்டி மகிழ்ந்து எழுதினார் ஆதலால். வாரம் கொண்டனர் என யான் சொல்லாவிடின் பிறர், அவரைப் பாயிரம் பகரும் பண்பறியாதவர் என்பர். அவ்வகைப் பழிப்பை அவர்மாட்டுக் கூறுதலை யான் விரும்புகின்றிலேன். என்னை? அவர், கற்றாரால் கற்றாரெனக் கழறப்படும் தகுதியைப் பெற்ற கணக்காயனார் ஆதலால்.

9. நன்று நான்மறை யானொடு மாலும்
சென்றார் போலும் திசையெலாம்
ஒன்றா யொள்ளெரி *யாய்! திரு வோத்தூர்
நின்றீ ரே! யுமை நேடியே.

முன்பாடம்:—*யாய் மிக.

முன் உரைகாரர் பொழிப்பு:—(திசை முற்றும் தான் ஒன்றாய், ஒள்ளிய நெருப்புருவாய்த் திருவோத்தூரின்கண் ஓங்கி நின்ற பரமனே! நன்றாகிய வேதம் நான்கினையும் ஓதும் பிரமனும் திருமாலும் முறையே உம்முடைய முடியையும் அடியையும் தேடி ஆராய்ந்து கொண்டு சென்றார்கள்; அதனை

* தோரமங்கலம் ஆசிரியர்-அ. வரதநஞ்சையப்பிள்ளை அவர்கள்.

அறியாதவர் தேவரீரை அவருள் ஒருவராக வைத்து எண்ணி மயங்குவர், எ-று.) என்பது.

இ - ள்:—உம்மைத் தேடிக்கொண்டு, தம்மைக் கற்றோர்கட்கு நலனை ஆக்கும் நான்கு மறைகளையும் கற்ற நான்முகனும் திருமாலும் செல்லும்படி, கீழ் உலகும் மேல் உலகும் ஆகிய எல்லா இடங்களிலும் பொருந்தி ஒள்ளியதாய் எரியும் தழல் போன்று நின்ற இறையவரே! திரு ஓத்தூரின் கண் நிலை பெற்றிருக்கும் இறையவரே வணக்கம் என்க.

குறிப்புரை:—நன்று-நலம். ஆம் - (பிறவினைப் பொருள்) ஆக்கும். ஒடு, எண்ஒடு. சென்றார்-(முற்றெச்சம்) செல்ல, செல்லும்படி. போலும், ஒப்பில் போலி. திசை எலாம்-கீழ் உலகும் மேல் உலகுமாகிய எல்லா இடங்களிலும். ஒன்றுஆய்-ஒன்றுதலாகி, பொருந்தி. எரிஆய்-(விளி.) எரியும் தழல் ஆகினுய், எரியும் தழல் போன்று நின்ற இறையவரே. நின்றீரே-நிலை பெற்று இருப்பவரே. வணக்கம், இசை யெச்சம். ஏ, அசை.

சிறப்புரை:— *முன் உரைகாரர் மொழிப்புப்படி, சிவபெருமான் நெருப்புருவாய் நீண்டு நின்றது திரு ஓத்தூரில் அன்று. அந் நிகழ்ச்சி அவ்வூர்ப் புராணத்துள்ளும் இல்லை. அவ்வகைப்பொருளை அவ்வுரைகாரர் எவ்வகையால் கொண்டார் என்பதும் விளங்கவில்லை. சிவபெருமான் அரி அயர்கள் பொருட்டு நெருப்புருவாய் நின்றது திருப்பாற் கடலிடை அல்லது திருஅண்ணுமலையில்என் பதும், தேவர்கட்கு வேதம் ஓதுவித்தற் பொருட்டு ஆசிரிய வடிவனுய் அமர்ந்தது திரு ஓத்தூரில் என்பதும் புராணங்களுள் காணப்படும் வரலாறுகள். அவர்தம் உரை, புராணங்களின் வரலாறுகளோடு மாறுபடுதலால் அது, மறுத்தற்பாலதாம். அவரால் அடிகள் தம் தேவாரத்தினின்றும் எடுத்துக் காட்டப்பட்ட காட்டுக்களெல்லாம் கழிக்கத் தக்கனவாம். என்னை ? பொருத்தம் இன்மையால். நிற்க,*

நான்மறைகள் என்பன *தொன்றுதொட்டு எழுதிக் கல்லாமல் ஆசிரியர்கள் சொல்ல மாணவர்கள் கேட்டுக் கற்றுவரும் ஆரிய மொழியாலாகிய* இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வடமொழி வேதங்களே ஆகும். அவை, தமிழ் மொழியால் ஆகிய தமிழ் வேதங்கள் அல்லவோ? அல்ல. என்னை? *ஆரியர்களால் சொல்லப்படும் இருக்கு முதலிய வேதங்கட்கும் கிறிஸ்தவர்களாலும், இஸ்லாமியர்களாலும் சொல்லப்படும் பைபிள்,*

குராஅன் ஆகிய அவைகட்கும் ஒப்பாகப் பண்டு ஒருகாலத்தில் தமிழ் மொழியால் தமிழர்கட்கு என ஒருவேதம் இருந்தது எனத்தெரியவில்லை. மலடி மகன்போல. என்னை? இருப்பின் அன்றோ தெரியப்படும். இன்று திருமுறைகள் எனச் சொல்லப் படும் (ஆரிய மொழிகள் திரிபுற்று விரவிய) தமிழ்ப் பாக்களால் ஆகிய நூற்களை வேதங்கள் என மொழிதல் முகமன் மொழியாம்.

சமயாசிரியர்கள் "இருக்காதி நான்மறை" என்ற தொடரில் இருக்காதி என்னும் வடமொழித் தொடரின் பக்கத்தில் நான் மறை என்ற தமிழ்மொழித் தொடரை வைத்திருத்தலால் பண்டு தமிழர்கட்கு எனத் தமிழ் மொழியாலும் வேதங்கள் இருந்தன வாகும். அவை, கடல் கோளால் அழிக்கப்பட்டன என்பர் சிலர். அவர் கூற்றினைத் "தாமறிவர் தாங்கண்டவாறு" (திரிகடு—36) என்ற பெரியார்தம் மொழியை உன்னி, மலடி என்ற சொல்லின் ஈற்று இகரம் பெரும்பாலும் பெண்பாலைச் சுட்டுதலால் மலடிக் கும் பண்டு மக்கள் பிறக்கும் வழக்கு இருந்தது போலும். அவ் வழக்கு இன்று மக்கள் கூட்டம் பெருகுதலால் நின்றபடியாம் என்பார் கூற்றொடு கூட்டி, அவர்களிடத்தில் சிலவினவுக. அவ் வினவல் யாவை ?

பண்டு நம் நாவலம் பொழிலினுள் தமிழர்கட்கு என இருந்த தமிழ் வேதங்கள் போலத் தமிழரும் ஆரியரும் அல்லராகிய பலவகை மொழியாளர்கட்கும் என்ன என்ன மொழியால் என்ன என்ன பெயர்களை உடைய வேதங்கள் இருந்தன? இன்று என்ன என்ன மொழியால் என்ன என்ன பெயர்களை உடைய வேதங்கள் இருக்கின்றன? பண்டிருந்து இன்று இல்லையாயின் அதன் ஏது என்னை? இன்ன காலம் என அறி தற்கு இயலாத முற்காலத்தில் ஆசிரியர் அகத்திய முனிவரால் தமிழ் மொழிக்கு எழுதப்பட்ட தமிழ் மொழியாலாகிய அகத் தியம் என்னும் (முதல்) இலக்கண நூலின் நின்றும் பல நூற் பாக்களையும், பிற ஆசிரியர்களால் எழுதப்பட்ட தமிழ் மொழி யால் ஆகிய பல யாப்பு இலக்கண நூற்களின் நின்றும் பல பாக்களையும், பல இசை நூற்களின் நின்றும் பல பாக்களையும், பேராசிரியர்கள் பலர், தம்மால் எழுதப்பட்ட முதல் நூற்களின் இடையேயும், உரை நூற்களின் இடையேயும், முன்னோர் மொழி யாகவும், எடுத்துக் காட்டாகவும் நாட்டி ஆண்டனர் அன்றோ ? அவ்வாசிரியர்கள் அந்நூற்களை எடுத்து ஆண்டாற்போல எந்த ஆசிரியரேனும் தம்மால் எழுதப்பட்ட நூலிடையே இது தமிழ்

வேதம் என எடுத்துக்கூறி அத்தமிழ் வேதப் பாக்களை ஆண்டனரோ ? ஆண்டிலராயின் இறந்துபட்டதாகச் சொல்லப்படும் தமிழ் மொழியாலாய வேதத்தினின்றும் பண்டைய ஆசிரியர்கள்எடுத்து ஆளாததன் ஏது என்னை? ஆண்டிருப்பர். அவ்வாளப்பட்டபாக்கள் கடல் கோளால் அழிந்தன போலும் எனின், அக்கடல்கோள், தமிழ் வேதத்தினின்றும் எடுத்துப் பிறநூற்களுள் ஆளப்பட்ட பாக்களையும் தேடி எடுத்துச் சென்றதோ ?

என்றும் எழுதிக் கற்கப்படாததாகிய ஆரியர்தம்வேதம் இன்றும் ஊறு ஒன்றும் இன்றி உலவாநிற்க எழுதிக் கற்கப்பட்டதாகிய தமிழர்தம் வேதம்மட்டும் வழக்காறற்று அழிந்ததன் ஏது என்னை? கடல்கோள் குமரி நாட்டினை அழித்தகாலத்தில் தமிழ்வேதம்அக் குமரி நாட்டில் மட்டுந்தான் இருந்ததோ? பிறதமிழ்நாட்டில்அத் தமிழ்வேதம் இருந்ததில்லையோ ? அக்குமரிநாட்டினர் மட்டுந் தான் தமிழ் வேதத்தைக் கற்றுவந்தனரோ? அக்குமரி நாட்டில் இருந்த தமிழ் வேதங்களோடே அவ்வேதங்களைக் கற்றுரையும் அக்கடல் பெருக்கு ஆய்ந்து தேடி எடுத்துக் கொண்டதோ ? அக் குமரி நாட்டினர் அல்லாத பிற தமிழ் நாட்டினரால் அத் தமிழ் வேதம் கற்கப்பட வில்லையோ? பிற தமிழ் நாட்டினர் கற்றிலராயின், அவர்கள் தமக்கும் பண்டு தமிழ்மொழியால் வேதங்கள் என நூற்கள் இருந்தன. அவை, கடல் கோளால் இறந்துபட்டன எனச் சொல்லிக் கொள்ளுதலால் ஆம் பயன் என்னை ? அக்கடல் கோள் தமிழ்வேதங்களையும், அத்தமிழ்வேதங்களைக் கற்ற தமிழ் வேதியர்களையுந்தான் தேடி அழித்துச் சென்றதோ ? பிற நூற்கள் அக்கடல் கோளால் அழிக்கப்படாமல் இன்றும் இருப்பதன் ஏது என்னை ? பொருள் இலக்கணம் அழிவுபட்டதற்கு வருந்தி இறைவனிடத்தில் முறையிட்டுப் பொருள் இலக்கணம் பெற்ற தமிழ் அரசன் அல்லது பிற தமிழர், தமிழ் வேதம் அழிவுபட்டதற்கு வருந்தி இறைவனிடத்தில் முறையிட்டு அத்தமிழ் வேதங்களை அல்லது வேறு தமிழ் வேதங்களைப் பெற்றுப் பாதுகாவாததன் ஏது என்னை ? ஆரியவேதங்களால் மூடப்பட்ட கோயிலைத் தங்கள் (வடசொல் விரவிய) தமிழ்ப்பாக்களால் திறக்கவும் மூடவும் செய்த சமயாசிரியர்கள், பாம்பு கடித்ததால் நஞ்சுஒன்றி இறந்தவர்களை உயிர் பெற்று எழச்செய்த சமயாசிரியர்கள், நோய் வாய்ப்பட்டு இறந்த பெண்ணைத் தீயிட்டு எரிக்கப்பட்டதால் வெந்து அழிந்த அவள்தன் உடம்பினின்றும் கழிந்த எலும்புகளைப் பின்னும் பெண்ணாக்கி உயிருடன் உலவச்செய்த சமயா

சிரியர்கள், முதலையால் விழுங்கப்பட்டு அழுக்காகி (மலமாகி) அழிவுபட்ட பார்ப்பன மகனை அவன் இறந்த பல ஆண்டுகளின் பின், கழிந்த ஆண்டுகளின் வளர்ச்சியுடன் உயிர்பெற்று வரச் செய்த சமயாசிரியர்கள், தங்களுடைய (வடசொற்கள் விரவிய) தமிழ்ப்பாக்களால் இறைவனைமகிழச்செய்து அவ்விறைவனுடைய திருவருளால் அக்கடல்கோளால் இறந்துபட்ட தமிழ் வேதங் களைப் பெற்றுத் தமிழர்கட்குத் தராததன் ஏது என்னை ? ஆரிய வேதங்களை அரக்கன் களவு செய்யப்பட்ட காலத்தில் அவ்வரக் கனை அழித்து அவ்வாரியவேதங்களை ஆரியர்கட்குத் தந்த இறை வன்போல ஒரு இறைவன் தமிழர்தம் வேதங்கள் அழிக்கப்பட்ட காலத்தில் அவ்வேதங்களை அழிக்கப்படா வண்ணம் பாதுகாத்துத் தமிழர்கட்குத் தராததன் ஏது என்னை ? ஆசிரியர் சேக்கிழா ரால் செய்யப்பட்ட பெரிய புராணத்தைத் தம்மதத்தின் சிறந்த நூலாகக் கொண்டு பாராட்டும் தமிழ் நாட்டுச் சைவர்களிற் சிலர் தங்கட்கும்பண்டு தமிழ் மொழியால் வேதங்கள் இருந்தன என்றும் அவை, பின் கடல்கோளால் இறந்துபட்டன என்றும், ஆதலால் அவை, இன்று இல்லை என்றும் சொல்லுதல்போலத் தமிழ்த் தேஎத்திலுள்ள வடகலை வைணவமதத்தார் சொல்லாவிடினும், தமிழ்த்தேஎத்தில் உள்ள தென்கலை வைணவ மதத்தார்களும் பண்டு தமிழ் மொழியால் வேதங்கள் இருந்தன என்றும், அவை கடல்கோளால் அழிந்தன என்றும் சொல்லிக் கொள்ளாததன் ஏது என்னை ? வைணவமதத்தார்க்கு உரிமையில்லாமல் பெரிய புராணச் சைவர்களாகிய ஒருவகைத் தமிழர் கட்கு மட்டும்தான் அழிவுபெற்ற அத்தமிழ் வேதங்கள் உரியனவாக இருந்தனவோ? வடமொழியால் வேதங்கள் இருந்தன எனக் கூறிய ஆசிரியர் சேக்கிழார், தமிழ்மொழியாலும் வேதங்கள் பண்டு இருந்தன என்று குறிப்பிடாததன் ஏது என்னை ? என்பன. பிறக,

பண்டு தமிழர்கட்கெனத் தமிழ்மொழியால் வேதங்கள் இருந் தன. அவை, கடல்கோளால் அழிவுபட்டன என்பார், நூற்களின் புறத்தனவாகிய (பருஉப்பொருட்டவாகிய) இப்பொது வினுக் கட்கு நேரிய நெறியில் விடைதருவாராயின், பின்னர், நூற்களின் அகத்தனவாகிய (நுண்பொருட்டவாகிய) சிறப்பு வினுக்களை விடுப்பன். அவைகட்கும் அவர்கள் நேரிய விடைகளைத் தருவா ராயின் பினனர் அவர்களால் காட்டப்படும் நன்றறியார் செய லாகிய ஆரியர்களையும் ஆரிய மொழிகளையும் தூற்றும் செயலை யானும் எற்றுப் போற்றுதலைப்பற்றி எண்ணுகின்றேன்.

ஒருவர் பிறர் குற்றங்களை எடுத்துக் காட்டுவதால் அவர் நன்று அறியார் ஆவரோ எனின், உண்மையாகிய குற்றத்தினைக் கண்டும் வாரத்தினால் அதனை எடுத்துக் கூறாமல் விடுத்து ஓரத்தினால் பொய்க் குற்றம் சார்த்திக் குறை கூறுபவரையே நன்று அறியார் என்றேன். என்னை? திருவாசகம் என்ற நூலின் முதல் நான்கு நெடும் பாக்கட்கு மட்டும் உரை எழுதிய ஆசிரியர் சாமி வேதாசலம் (மறைமலை அடிகள்) அவர்கள், அந்நான்கு பாக்களுள் போற்றித் திருஅகவல் என்னும் பாவின் இடையே "ஆறு திங்களின் ஊறு அலர் பிழைத்தும்" என்ற அடிக்கு; ("ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே தீய, வழுக்கியும் வாயாற் சொலல்" (திருக்கு. 139.) என்ற பொய்யா மொழியார்தம் விதியையும் புறக்கணித்தவராகி ("ஆறுந் திங்களில் கொலைக்குக் காரணம் ஆகிய பழிச் சொல்லுக்குத் தப்பியும்" எனப் பொழிப்புரையும், **கணவர் இல்லாக்காலத்தேனும், கைம்மை நிலையிலேனும் பிழைத்துக் கருக்கொண்ட மகளிர் தாம் சூல்கொண்டமை ஆறுதிங்களிற் புறத்தார்க்குக் கட்புலனாக, அவர் அது கண்டு பழித்துத் தூற்றுவர் ஆகலின் அப்பழி மொழிக்கு அஞ்சி அம்மகளிர் அவ்வாறுந் திங்களிற் கருச்சிதைத்தற்கு முயலுதல் வழக்கம்** அங்ஙனம் சிதைக்கப் படுதலுக்குத் தப்பியவாறு தெரிப்பார் "ஆறு திங்களின் ஊறு அலர் பிழைத்தும்" என்றார்) எனச் சிறப்புரையும் செப்பி எழுதினர்.

ஆறுந்திங்களிலே கருவைச் சிதைப்பர் என்பதனையும், அது ஒரு வழக்கம் என்பதனையும், அறிஞர்கள் நினைவு கூர்ந்து அவர்தம் ஒழுக்க முறைமையை உணர்வார்கள் என யான் நம்புகின்றேன்.

அவரால் உரைக்கப்பட்ட அப்பொருளால் பொதுவாக நம் நாவலம் பொழிலில் வாழும் மகளிர் யாவரும் கற்பு நெறி கடந்து ஒழுகுபவர் (விபசாரிகள்) எனவும், சிறப்பாக நம் தமிழ்த் தேசத்தில் வாழும் சைவசமய மகளிர் யாவரும் கற்புநெறி கடந்து ஒழுகுபவர் (விபசாரிகள்) எனவும் கருதலாம் அன்றோ? என்னை? சைவசமயத்தவராகிய தமிழ்ப் பெரியாரால் தமிழ்மொழியில் எழுதப்பட்ட முதல் நூல் அத்திருவாசகம் ஆதலால். அவ்விழிதகைய பொருளைப் பொய்யாகத் தமிழ்மகளிர் மாட்டு ஏற்றி எழுதிய மனிதரை (அவர் ஒரு தமிழர் என்ற வாரத்தினால்) சாமி என்றும் அடிகள் என்றும் போற்றுகின்றவர்கள் நன்று அறிந்தார் ஆவரோ? ஆகார். நிற்க, உண்மையான குற்றத்தை (கருத்தை) எடுத்துச் சொல்லுபவரை ஓரத்தினால் தூற்றுகின்றவர்கள் நன்று அறிந்

தார் ஆவரோ? ஆகார். எவரைத் தூற்றுகின்றூர்கள் எனின், பேராசிரியர் மு. இராகவ ஐயங்கார் அவர்கள் தம்மால் எழுதப் பட்ட தொல்காப்பிய ஆராய்ச்சி என்ற நூலில் ஆரியர்கள் தமிழர் கட்குக் கற்புநெறியைக் காட்டினூர்கள் என எழுதினூர் என்று (அவர் ஒரு பார்ப்பனர் என்ற எண்ணத்தினூல்) அவர்மீது பொய்க் குற்றம் சார்த்தி அவரை வைத வசைமொழிக்கு வரைவு உண்டோ?

சாமி வேதாசலம் என்பவர் தமிழர் என்ற எண்ணத்தினூல் அவர் தம் பிழையை மறந்து அவரைப் போற்றியும், திரு.மு. இரா கவ ஐயங்கார் என்பவர் பார்ப்பனர் என்ற எண்ணத்தினூல் அவர் தம் உண்மை ஆய்வின் திறத்தைப் புறக்கணித்து அவர்பால் பொய்க் குற்றம் சார்த்தி அவரைத் தூற்றியும், ஆரியர் மாட்டும் ஆரிய மொழி யிடத்தும் கொண்ட பகைமையால் நூலாசிரியர்-தம் கருத்துக்கு மாறுகத் தம் கருத்துப்படி பொய்ப்பொருள் கூறியும் எழுதியும் திரியும் கூட்டத்தினர் போன்றூரையே யான் இவண் நன்று அறியார் என்றேன் என்க.

காஞ்சி மெய்கண்டார் கழகத்தாரால் பதிப்பிக்கப்பட்ட காஞ்சிப் புராணத்தின் குறிப்புரையுள் தமிழர்கட்கு எனத் தமிழ் மொழியால் பண்டு வேதங்கள் இருந்தன எனக் குறித்தார்களே எனின், ஆரிய மொழியிடத்து ஏதுவின்றிப் பகைமை பாராட் டப்படும் இக்காலத்தில் எவரும் தம் கொள்கையாகிய எதனையும் எந்நூலகத்தும் புகுத்தி எழுதலாம் அன்றே? என்னை? அயலார் ஆளுகைக்கு உட்பட்டிருத்தலால் நூலாசிரியர் கருத்துக்கு மாறுகப் பொய்யுரை எழுதுபவர்களைத் தண்டிப்பார் எவரும் இன்று இலர் என்ற எண்ணத்தால் எழுதினூர்கள். அக்குறிப் புரையைப் பொய்களாகிய குப்பைகட்கு ஒரு கொட்டில் எனக் கொள்ளுக. என்னை? அவ்வுரை, அந் நூலாசிரியர் தம் கருத் துக்கும், உண்மைக்கும், தமிழ் மரபுக்கும் மாறுக எழுதப்பட்ட தால். அக்குறிப்புரையை எழுதுவித்த அக்கழகத்தார்தம் சீரில் செயலை எடுத்து இயம்புதலும் நாவிற்கு ஒரு இழுக்கேயாகும். ஆதலால், அக்கழகத்தார்தம் பேச்சும், அக்குறிப்புரைப் பேச்சும் இவண் மேல் வேண்டா.

10. கார மண்கலிங் கத்துவ ராடையர்
தேரர் சொல்லவை தேறன்மின்
ஓரம் பாலெயி லெய்தவ னோத்தூர்ச்
சீர வன்கழல் சேர்மினே.

155 6/2(1937) 85-00/

முன் உரைகாரர் மொழிப்பு:—(உலகத்தீரே! கரிய சமண் சமயத்தைச் சேர்ந்த, கலிங்கமாகிய சிவந்த ஆடையை அணிந்துள்ள சமணரும், தேரவாதிகளும் சொல்லுகின்ற பொய்ப்பொருள்களை மெய்யென உணராதீர்கள்; மற்று, திரிபுராதிகளின் மூன்று மதில்களையும் ஓர் அம்பினால் எய்தவனும், திருவோத்தூரில் எழுந்தருளிய மெய்ம்மையான கீர்த்தியை யுடையவனுமாகிய பரமனுடைய வீரகண்டை யணிந்த திருவடியைச் சிந்தித்தடைவீர்களாக, எ-று.) என்பது.

பொருள்கோள்:—கார் அமண் துவர் கலிங்கம் ஆடையர் தேரர் சொல் அவை தேறல்மின் ஓர் அம்பால் எயில் எய்தவன் ஓத்தூர் சீர் அவன் கழல் சேர்மின் ஏ.

இ-ள்:—நீரில் குளியாமையால் அழுக்குப்படிந்து கரியவாகிய மேனியை உடைய சமணர்களாலும், துவர் தோய்க்கப்பட்டுச் சேவந்த கலிங்கமாகிய ஆடையைப் போர்த்துக் கொள்ளுகின்ற பௌத்தர்களாகிய தேரர்களாலும் சொல்லப்படும் பொய்யாகிய அறநெறிகளை மனத்துள் பொருளெனக் கொள்ளாதீர்கள். ஒரு அம்பினைச் செலுத்தி மூன்று மதில்களையும் ஒரே காலத்தில் அழியும்படி செய்தவனும், திருவோத்தூரின்கண் எழுந்தருளிய மிக்க புகழை உடையவனும் ஆகிய சிவபெருமான்றன் திருவடிகளை வாழ்த்தி வணங்குங்கள். வணங்குவீர்களாயின் அப்பெருமான்றன் திரு அருளுக்கு உரியவர் ஆவீர்கள் என்க.

குறிப்புரை:—கார் - கருமை. அமண், சமணர் விகாரம். கார்அமண் - கரியமேனியை உடைய அமணர். கலிங்கம் - (ஆகுபெயர்) ஆடை. துவர்ஆடை "மருதமரத்தின் (வேரினின்றும் - பூவினின்றும்) கொண்ட" துவரில் தோய்க்கப் பட்டதால் சேவந்த ஆடை. கலிங்கம் துவர்ஆடை, இரு பெயர் ஒட்டு. துவராடையர், பௌத்தர். தேரர், (ஸ்தவிரர் என்ற வடசொல் திரிபு) பௌத்தர். துவராடையர் தேரர், இருபெயரொட்டு. சொல் அவை, சொல்லப்படும் அறநெறிகள். தேறல்மின் - தெளியாதீர்கள், மனத்துள் பொருளெனக் கொள்ளாதீர்கள். ஓர் - ஒரு. அம்பால்: ஆல், உருபுமயக்கம். எய்தவன், சிவபெருமான். - சீர் (உரிச்சொல்.) மிக்க புகழ். அவன் - சிவபெருமான். சேர்மின், வாழ்த்தி வணங்குங்கள். ஏ, அசை.

சிறப்புரை:—கார் அமண் என்றதன் குறிப்பு: அமணர்கள் ஸ்வேதாம்பரர் எனவும், திகம்பரர் எனவும் இருவகையினர்.

இன்று தமிழ்த் தேசத்தில் வாழ்கின்றவர்கள் திகம்பரர் என்ற அமணர்கள். அவர்கள் சிறுதவம் (க்ஷுல்லக தவம்) என்றும், பெருந்தவம் (மஹாதவம்) என்றும் தவநெறியை இருவகையாகக் கொள்ளுபவர். அவ்விருவகைத் தவங்களுள், பெருந்தவமுடைய முனிவர்கள் நீரில் படிந்தேனும் முகந்தேனும் குளியார்கள். கோவணமும் கொள்ளார்கள். ஆதலால், அவர்கள் மேனிகள் அழுக்குப் படிந்து ஒளி மழுங்கித் தோன்றும். அவ்வழுக்குப் படிந்த மேனிகளை உடைய சமண முனிவர்களைக் கரிய மேனியர் என்றும், அழுக்கு மேனியர் என்றும், மாசுமேனியர் என்றும் வெற்றரையர் என்றும் பலவாறாகச் சொல்லி இழித்து உரைத்தார்கள் சைவசமய ஆசிரியர்கள். என்னை? அவ்வாசிரியர்கள், தம் மதத்தின் தத்துவங்களையும் தர்க்க நெறியில் கற்றிலர் போலும், கற்றிருப்பின் தங்கள் தேவாரப்பாக்களுள், தம் மத தத்துவங்களின் பெருமைகளைத் தர்க்க நெறியில் எடுத்துச் சொல்லிப் பிற மத தத்துவங்களின் இழிவுகளைக் காட்டிப் பாடியிருப்பார்கள். அவர்கள் தர்க்க நெறியில் தம் மத தத்துவங்களை எடுத்துப் பேசாமல், தாம் தோல்வியுற்ற காலத்தில் தம்மை வென்றாரை வைதுரைக்கும் இழிதொழிலை மேற்கொள்ளும் அறிஞர்கள்போலச் சமண பௌத்தர்களை வைதிரார்கள் என்க. என்னை? இன்றும் வெல்லப்பட்டார் வென்றாரை வைதுரைத்தலை உலகவழக்கில் வைத்துக் காண்க.

அச்சமண முனிவர்கள் அல்லது அச்சமய இல்லறத்தாராகிய சிராவகாகள் பிறப்பால் கரிய மேனியர் அல்லர். ஏனைய மக்கள் எவ்வெந் நாட்டில் எவ்வெவ் வண்ணத்தினரோ அவ்வந் நாட்டில் வாழும் (பிறந்த) சமணர்களும் அவ்வவ் வண்ணத்தினராகவே தோன்றுவர் என்பதனை அறியாமையால் "கரிய சமண் சமயத்தைச் சேர்ந்த சமணர்" என்றார் முன்னுரைகாரர். மற்றும் அவர்தம் கருத்துப்படி சமணர்தம் மதமும் கரியதன்று. வண்ணங்களுள்ளே வெள்ளிய வண்ணத்தினையே தூயது என்பது போல மதங்களுள்ளே அச்சமணர்தம் மதத்தினைத் தூயது என்னும் பொருட்டால் வெள்ளியது எனலாம். என்னை? சைவர்தம் பெரிய புராணத்தைப் போலத் தீய பாபங்கட்கு ஏதுவாகும் பொய்யை யுரைத்தலும், உயிரைக் கொல்லுதலும், புலாலை உண்ணுதலும், பிறர் பொருளைக் கள்ளுதலும், அயலான் மகளை விழைதலும், பற்று மிகுதற்கு ஏதுவாகும் பேராவினால் மிகு பொருளைத் தேடுதலும் ஆகிய தீய தொழில்களைப் புகழ்ந்து

பேசாமல் அவற்றை நீக்கி ஒழுகுதலால் ஆம்பயனை முன்னொடு பின் முரணின்றிமொழிந்து துன்பங்கட்கு ஏதுவாகும் பாவங்கள் உயிர்களைப் பற்றாதபடி தடுக்கும் வழியை அறிவித்து உயிர்களைப் பாதுகாக்கும் பண்பினை உடைய மதங்களுள் அச்சமணர்தம் மதமும் ஒன்று ஆதலால்.

“கரிய சமண் சமயத்தைச் சேர்ந்த கலிங்கமாகிய சிவந்த ஆடையை அணிந்துள்ள சமணர்” என்றார் முன்னுரைகாரர். அவர் தம் மாற்றம், மரபறியார் மாற்றமாம் என மறுத்தற் பாலதாம். என்னை? சமணர் செவந்த ஆடையை அணிபவர் என்பதூஉம், வேறு சமயத்தைச் சேர்ந்த சமணரும் உளர் என்பதூஉம் அவர் தம் கருத்துப்போலும். அப்படி கருதுதலும் பிழையேயாம். என்னை? செவந்த ஆடையைப் போர்த்திருப்பவர் பௌத்தசமயத் துறவிகளே ஆவர். சமண் சமயத் துறவிகள் அல்லர். அவர்கள், பற்று ஆம் (மிகும்) எனக் கோவணமும் கொள்ளாதவர்கள் ஆதலாலும், வேறு எந்த மதத்தினர்கட்கும் சமணர் என்ற பெயர் இல்லாமையாலும். நிற்க,

மற்றும் முன்னுரைகாரர் “ஆடை ஒழித்து அங்கு அமணே திரிந்து உண்பார் அல்லல் பேசி மூடு உருவம் உகந்தார்” (திருஞா-தேவா.) “போகம் அறியார் துவர் போர்த்து உழல்வார்” (வேணுபு-தேவா) என்ற இருவகைத் தொடர்களைக் காட்டி ‘அவர்கள், (சமணர்கள்) ஆடையின்றி நிருவாணிகளாய் இருப்பதும், தம்மை மறைத்துக் கோடலும் உண்டெனக் கூறுதலின், ஈண்டுக் கூறும் துவராடை *மேற்போர்வை போலும்” என்றார். அத்தொடர்கட்கு அவ்வகைப் பொருளை அவரன்றி மரபறிந்த அறிஞர் எவரும் கொள்ளார். என்னை? பற்று ஆம் (மிகும்) என்ற எண்ணத்தினால் கோவணமும் கொள்ளாதவராகிய சமண்சமயத் துறவிகள் மேற்போர்வையைக் கொள்ளுவரோ? கொள்ளார்

---

*சமண் சமயத்தில் சிறுதவம் (ஆடையுடன் கூடிய ‘சுல்லக’ தவம்) உடையவர்கள் சிறு அளவில் செவ்வாடை அணிவர் ஆயினும், அச் சிறுதவம் உடைய சமண் சமயத் துறவிகளைத் தம் தேவாரங்களில் திருஞானசம்பந்தர் பழித்திலர். என்னை? சைவ சமயத்துள்ளும் ஒருவகையார் சிறு அளவில் செவ்வாடை அணிதல் வழக்கு ஆதலால். அடிகள், தம் தேவாரங்களுள்ளே செவந்ததும் நீண்டதும் ஆகிய ஆடையை மேற்கொண்டு திரியும் பௌத்தர்களையும், கோவணமும் கொள்ளாத (நிர்க்கிரந்த வேடமுடைய) மஹா தவமுடைய சமண் சமயத் துறவிகளையுமே பழித்துள்ளார் எனக் கொள்ளுக.

ஆதலால். மக்கள், ஆடையை நீக்கிய நிலைமைக்கு நிர்வாணம் என்பது பெயர் அன்று என்பதனை ஆன்றோர் மாட்டுக் கேட்டறிக.

அவ்விருவகைத் தொடர்களில் கூறப்பட்ட "ஆடை ஒழிந்து அங்கு அமணே திரிந்து உண்பார்" "போகம் அறியார்" என்ற குறிப்புக்கள், சமண் சமயத் துறவிகளைக் குறிப்பன என்றும், "அல்லல் பேசி மூடு உருவம் உகந்தார்" "துவர் போர்த்து உழல்வார்" என்ற குறிப்புக்கள் பௌத்தசமயத் துறவிகளைக் குறிப்பன என்றும் கொள்ளல் வேண்டும். ஆதலால், "மூடு உருவம் உகந்தார்" "துவர் போர்த்து உழல்வார்" என்பன சமண் சமயத் துறவிகளைக் குறிப்பன அல்ல எனக் கொள்ளுக. மற்றும், "கமழ் துவர் ஆடையினால் தம் மெய்யைப் போர்த்து உழல் வாரும்" (திருப்புக. தேவா.) என்ற தொடரைக் காட்டிச் "சமண் சமயத் துறவிகள் போர்வையை உடையார்" என்றார். அத்தொடரின் பொருள் பௌத்த சமயத் துறவிகளையே குறிப்பதாகும் அல்லாமல், சமண்சமயத் துறவிகளைக் குறிப்பதன்று, அத்தொடரின் முன் நின்ற "கையில் உண்டு உழல் வாரும்" (திருப்புக. தேவா.) என்ற தொடரின் பொருளே சமண்சமயத் துறவிகளைக் குறிப்பதாகும். நிற்க,

அடிகள், தம் தேவாரத்தில் பெரும்பாலும் ஒவ்வொரு பதிகத்திலும் ஈற்று அயல் பாவில் சமணர், பௌத்தர் ஆகிய இருவகை யாரையும் குறித்திருத்தலை அவர்தம் தேவாரத்தைப் பொறுமையுடன் கற்பார் அறிவர். "கற்றது கைம்மண் அளவு, கல்லாத உலகு அளவு" என்ற பொன்மொழியைப் புறக்கணித்துக் "கற்கக் கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக" "பணிவு உடையன் இன் சொலன் ஆதல் ஒருவர்க்கு அணி, அல்ல மற்றுப்பிற" "பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய, சுருக்கத்து வேண்டும் உயர்வு" என்ற பொய்யில் புலவனார்தம் பொருளுரைகளைத் தேராமல், கற்றோரால் கவிச்சக்கரவர்த்தியார் எனப் பாராட்டப்படும் ஆசிரியர் கம்பர்தம் புலமையைத் தூற்றித் திரிபவரும், இன்று வட ஆர்க்காடு என்பது பண்டைய தொண்டை நாட்டின் ஒரு பகுதி என்பதனையும், அது இன்றும் பேராசிரியர்கள் பலர்க்கும் நாடு ஆம் என்பதனையும் தெரிந்து கொள்ளாமல், வட ஆர்க்காடு கல்வி அறிவு இல்லாத நாடு என எள்ளி இகழ்பவரும் அறியார். என்னை? அவர்தம் அறிவு, பழித்தல் தொழிலை மேற்கொண்டதால். நிற்க,

மற்றும் அவர், "கடு உடை வாயினர் கஞ்சிவாயினர் பிடதுரை பேணிலார்" (வைகல் — தேவா.) "உடம்பினை மறைக்கும் படக்கர் கள் பிடக்துரை" (புறம்ப—தேவா.) என்ற தொடர்களைக் காட்டிச் "சுவாமிகள் பிடகநூலின் மெய்ம்மை இன்மையை உணர்த்துமாறு காணப்படும்" என்றார். பிடகம் என்ற நூல் சமணர்தம் நூலன்று. அந்நூல் பௌத்தர்கட்கே உரியது. அவ்விருவகைத் தொடர் களில் உள்ள "பிடதுரை" "பிடக்துரை" என்ற பெயர்களும் சமணபௌத்தர்தம் நூற்களைக் குறிப்பன அல்ல, அவை, "பிணக்குரை" என்ற சொற்றொடரின் பிழையுற்ற பாடங்கள். அப்பிழைகள், முன் உரைகாரர் போன்ற மரபறியாதார் எவ ராலோ செய்யப்பட்டன போலும். என்னை ? அப்பிழைகளைப் 'படக்கர்கள் பிடக்துரை" என்ற தொடரை உடைய பாவின் பொருளால் அறிக. சமணர்களைச் சாத் (ஸ்யாத்) வாதிகள் என் பது போலப் பௌத்தர்களைத் தேர (தவிர-ஸ்தவிர) வாதிகள் என்னும் வழக்கு நூற்களில் இல்லை. என்னை ? சமணர்தம் சாத் (ஸ்யாத்) என்ற சொல், அவர்களுடைய சப்தபங்கி (எழுவகை) நியாயம் என்னும் தத்துவ விளக்கத்தில் இன்றியமையாப் பொரு ளாய்ச் சார்ந்து நிற்றல் போலப் பௌத்தர்தம் தேர (ஸ்தவிர) என்ற சொல் அவர்களுடைய தத்துவ விளக்கத்தில் சார்ந்து நிற்றலில்லை ஆதலால். இவ்வேதுவினால் முன் உரைகாரர் பௌத் தர்களைத் தேரவாதிகள் என்றதும் குற்றமாம். நிற்க,

தேவாரங்களைப் பொழுது போக்கிற்கும் பண் இசைக்கும் மேற்கோள் உரைக்கும் அங்கொரு பாவையும் இங்கொருபாவையு மாகப் படித்தல் அல்லாமல் "சொல்லிய பாட்டின் பொருளு ணர்ந்து சொல்லுவார், செல்வர் சிவபுரத்தின்" என்ற திருமுறை யின் பொருளை உன்னி, முறையே எச்ச முடிபுகளை இகழாதவ ராகியும், வாக்கிய வழியின் வழுவாதவ ராகியும், பொருளைப் போற்றிப் படித்தவர்கள், அத்தேவாரங்களுள் பிணக்துரை, பிடக்துரை யாஞற் போலப் பிழையுற்ற பாடங்களை ஆயிரத்தின் மேலும் அறிந்திருப்பார்கள் என யான் நம்புகின்றேன்.

11. குரும்பை யாண்பனை *யீன்றிரு வோத்தூர்
அரும்பு கொன்றை யடிகளைப்
பெரும்பு கலியுண் ஞானசம் பந்தன்சொல்
விரும்பு வார்வினை வீடே.

முன்பாடம்:—*யீன்குலை.

முன் உரைகாரர் மொழிப்பு:—(ஆண்பனைகள் குரும்பையினையும் குலையினையும் பெறும், திருவோத்தூரில் எழுந்தருளி இருக்கும் அரும்புகளையுடைய கொன்றை மலரால் தொடுக்கப்பட்ட மாலையணிந்த தலைவனுகிய பரமனைப் பெருமையினையுடைய சீகாழி என்னும் ஊரில் தோன்றிய ஞான சம்பந்தன் பாடிய பாட்டுக்களை விரும்பிப் பரவுவோருடைய வினைப்பயன் சிவபோகமேயாம். எ-று.) என்பது.

பொருள்கோள்:—ஆண்பனை குரும்பை ஈன் திரு ஓத்தூர் கொன்றை அரும்பு அடிகளை பெரும் புகலி உள் ஞான சம்பந்தன் சொல் விரும்புவார் வினை வீடு ஏ.

இ-ள்:—தம்முடைய திருவருளால் ஆண் பனைகள் குரும்பையாகிய இளங்காய்களை ஈன்ற திருஓத்தூரின் கண் எழுந் தருளியவரும், கொன்றையின் மலர்களை முடியில் சூடாநின்றவரும் ஆகிய சிவபெருமானைப் பெருமை பொருந்திய திருக்காழி நகரில் பிறந்தவராகிய திரு ஞானசம்பந்த சுவாமிகளினால் புகழ்ந்து சொல்லப்பட்ட இத் திருப்பதிகத்தினை விரும்பிக் கற்பார்தம் செயல் வீடு அடைதற்கு ஏதுவாகிய செயலாகும் என்க.

குறிப்புரை:—குரும்பை, பாளையில் தோன்றும் இளங்காய். ஈன்திருவோத்தூர், வினைத் தொகை. அரும்பு - (ஆகுபெயர்) மலர். கொன்றை, மரவகை. அது அரும்பாகிய சினைக்குரிய முதல். அரும்பு கொன்றை, கொன்றை அரும்பு. முன்னுரைகாரர் கருத்துப்படி கொன்றை, ஆகுபெயரால் மாலை அன்று. அடிகள், சிவபெருமான். புகலி—திருக்காழி நகர். உள், ஏழனுருபு. சொல், (ஆகுபெயர்) திருப்பதிகம். விரும்புவார்—(ஆகுபெயர்.) கற்பார். வினை-செயல். வீடு—(ஆகுபெயர்.) ஏது. ஏ, தேற்றம்.

சிறப்புரை:—"ஆண்பனைகள், குரும்பையினையும் குலையினையும் பெறும் திருவோத்தூர்" என்று கூறினார் முன்னுரைகாரர். அவர்தம் கூற்றுக் குற்றமேயாம். என்னை? ஆண்பனைகள் குரும்பை பொருந்திய பாளைகளை ஈனுதல் வழக்கில்லை. பெண்பனைகளும் குரும்பையை வேறாகவும், குலையை (பாளையை) வேறாகவும் ஈனுதல் வழக்கில்லை. சிவபெருமான் திருவருளால் ஆண்பனைகள் பெண்பனைகளாக மாறிக் குரும்பைகள் பொருந்திய பாளைகளை (குலைகளை) ஈன்றன என்பதே புராண வரலாறு. ஆதலால், அடிகள் "ஆண்பனைகள் குரும்பைகள் பொருந்திய பாளைகளை ஈன்ற திருவோத்தூரில் எழுந்தருளிய இறைவனைப் பற்றிய திருப்பதிகம்" என்றார்கள் எனக் கொள்ளுதலே சிறப்பாம்.

"விரும்பு மேன்மைத் திருக்கடைக் காப்பு அதனில் விமலர் அருளாலே, குரும்பை ஆண்பனை ஈனும் என்னும் வாய்மை குலவுதலால், நெருங்கும் ஏற்றுப் பனைஎல்லாம் நிறைந்த குலைக ளாய்க் குரும்பை, அரும்பு பெண்ணை ஆகி இடக்கண்டோர் எல்லாம் அதிசயித்தார்." என்பது ஆசிரியர் சேக்கிழார்தம் திரு வாக்கு. (சம்ப-புரா-980) இப்பாவில் ஈனும், என்பது ஈன வேண் டும் என்பதன் பொருட்டு. "குலைகளாய்க் குரும்பை" என்ற பாடம் "குலைகளார் குரும்பை" என்று இருத்தற் பாலது. மற் றும், அடிகள் புராணத்துள் 443, 602, 637, 638, எண்களுள்ள நான்கு பாக்களும் உண்மைக்கும் கவிக்கருத்துக்கும் மாறுகப் பிழை பெற்றனவேயாம். அப்பிழைகளை இவண் குறிப்பின் இவ்வுரை விரிதல் அன்றி, மற்றொன்று உரைத்தலும் ஆம். ஆதலால் ஆய்ந்து அறிக.

"அரனைத்தொழுது குரும்பை ஆண்பனை என்று ஒருபா அறைந்திடலும், மரனில் கருங்காய்க் குலைசாய்ப்ப வானோர் தருமாமலர் சொரிந்தார்" என்ற தலபுராணக் கூற்றும் இவண் நினைத்தற் பாலதாம். நிற்க,

"கொன்றை என்றது ஆகுபெயரால் மாலை" எனவும், அது "மார்பில் அணியப்படும் மாலை" எனவும் எழுதினர் முன் உரை காரர். அவ்வுரையும் பிழையே. என்னை ? அடிகள், முன்னர், "தார்நார் கொன்றை துயங்கு முடியுடை நாதா எனவும் கொன் றையந் தாரும் குளிர் மதியமும் கூவிளமலரும் ....ஆறும் ஓர் சடைமேல் அணிந்த எம் அடிகள்" (ஐயாறு-தேவா.) "கொன் றைத் தாரோடு தண் கரந்தை சடைக்கு அணிந்த தத்துவனூர்" (ஐயாறு-தேவா) "வண்டமரும் மலர்க் "கொன்றைமாலை வார் சடையான்" (காட்டுப்-தேவா.) தாரிடு கொன்றை யொர் வெண் மதி கங்கை தாழ்சடைமேல் அவை சூடி" (வாழ்கொளி-தேவா.) எனவும் கூறினர் ஆதலாலும், "கொன்றையைச் சிவ பெரு மான்றன் முடிக்கு அணியாகச் சொல்லுதலே பெருவரவிற்று ஆத லாலும், "கொன்றையின் மலர்களை முடியிற் சூடியவர்" எனவே சிறப்பாம்.

அடிகள், "மண்மகிழ்ந்த அரவம் மலர்க் கொன்றை மலிந்த வரை மார்பு" (பிரம-தேவா.) என்ற தொடரின் பொருளை யானும் அறிந்தே கூறினேன். "கொன்றை மார்பின் மாலை" எனல் இழுக்கென்பது என் கொள்கை அன்று. அது யாவர்க்கும் உடன்பாடு ஆதலால். முன்னுரை காரரால் பொருள்கொள்ளப்

பட்ட முறையையே இவண் குற்றம் உடைத்து என்றேன். "கொன்றை, மாலைக்கு ஆகுபெயர்" என்றதும் குற்றமே. என்னை? அரும்பு என்ற சொல் இருந்தும், அச் சொல்லை விட்டு அவ் வரும்பின் முதலாகிய அடைமொழியைக் கொண்டு ஆகுபெயரால் பொருள் கொண்டது ஆசிரியர்வழக்கன்று ஆதலால்.

"குரும்பை ஆண்பனை ஈன்குலை ஓத்தூர்" என்ற மூன் பாடப் படியே பொருள் வேண்டுபவர், "ஆண்பனை குரும்பைகுலை ஈன் ஓத்தூர்" என மொழி மாற்றிக்கொண்டு "ஆண்பனைகள் குரும்பையாகிய இளங்காய்கள் பொருந்துதற்கு ஏதுவான குலைகளை (பாளைகளை) ஈனுதல்வேண்டும் என்று; திருவோத்தூரின்கண் எழுந்தருளியவரும், கொன்றையின் மலர்களை முடியில் சூடாநின்றவருமாகிய சிவபெருமானைப் பெருமை பொருந்திய திருக்காழி நகரில் பிறந்தவராகிய *திருஞான சம்பந்த சுவாமிகளினால் புகழ்ந்து சொல்லப்பட்ட இத் திருப்பதிகத்தினை விரும்பிக்கற்பாரைப் பாவங்கள் பற்றாமல் நீங்கும் எனப் பொழிப்புரைத்துக் கொள்ளுக.

இப் பொழிப்புக்குரிய குறிப்புரை:—வினை - பாவம். வீடு என்பது விடுதல் என்னும் பொருட்டு, அது முதனிலை திரிந்த தொழிற் பெயர். விடுதல் ஆகும், நீங்கும் எனக் கொள்ளுக. ஏ - தேற்றம். அன்றி "விரும்புவார் வினை வீடே" என்பதற்கு விரும்பிக் கற்பார்தம் செயல் வீடு அடைதற்கு ஏதுவாகிய செயல் எனக் கோடலும் ஆம்.

திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய
† திரு ஓத்தூர்த் தேவாரத்தினுக்கு
வே. மு. ஸ்ரீநிவாச முதலியார் எழுதிய சிற்றுரை முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்

"குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்,
மிகைநாடி மிக்க கொளல்"

---

*அடிகள்தம் தேவாரப் பதிகங்களில் ஈற்றில் உள்ள திருக்கடைக்காப்புப் பாக்கள் அடிகளால் பாடப்படாமல் பிறர் எவராலோ பாடப்பட்ட சிறப்புப்பாயிரம் என்பது என் நம்பிக்கை.

† திரு ஓத்தூர், செய்யாறு தாலூக்கா ஆகிய திருவத்திபுரம் என்பது. அது, காஞ்சீபுரத்தின் தென்மேற்கில் இருகாத எல்லையுள் உள்ளது.